அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம்- 11 | மார்ச்-ஏப்ரல் 2022 | திருவள்ளுவர் ஆண்டு 2053




சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது

# மீண்டும் ஒரு பெருவெடிப்பு நிகழத்தான் போகிறது

## BIG BANG THEORY

ஏற்கனவே நிகழ்ந்துவிட்ட
பெருவெடிப்பு ஒன்றிலிருந்து
சிதறிய துகளொன்றில்
சின்னஞ் சிறியனாய்
நின்று கொண்டு
சிந்திக்கத் தெரிந்த
விலங்கினம்
நானெனும் நினைவகந் தாங்கி
அண்டவெளியில் ஓர்
உயிரலகாய்ப் பேசவிழைகிறேன்.

அட மானிடா!
ஆக்க அளவிறுதியில்லா
அனைத்துலகும் ஆக்கும்
அத்தனை தகையிருந்தும்
அழிக்கத்தான் உன் ஆக்கமென
இறுதிக் கணமொன்றிலேனும்
உணரத்தொடங்குவாயா?

நீக்கமற நிற்கும்
நீலவான் கொண்ட அண்டவெளி
தனிலே நீயும் ஓர்
அங்கம்தானென எப்போது புரிந்து
கொள்வாய்?

பூத்துக்குலுங்கிப் புன்னகை
சேர்த்துப் பொறுமையொடு
உனையும் காத்துக்கிடக்கும்
பூமித்தாய் அவளெழிலைப்
போக்கும் உரிமைதனை
எங்ஙனமே நீ கொண்டாய்?

நோய்வாயில் அகப்பட்ட உலகு
மெல்ல நழுவிப்
பிழைத்துக்கொண்டு
பெருமூச்சுவிட விளைகையிலே,
போர்வாயில் அகப்பட்டு
அஞ்சிக்கிடக்குதய்யோ!

நோயும் நோய்க்கு மருந்தும்
போரும் போருளே வாழ்வும் தந்து,
மெய்மறைத்துப் பொய்யுரைத்து
ஆங்கே சிந்திச் சிதறும் குருதியில்
சில்லறைத் தனம்கொண்டு
சட்டைப்பை நிரப்பிச்
சிறுமைத்தனம் செய்கிறாய்
ஆணவத் தலைச்செருக்கே!

கலங்கரை விளக்கங்கள்
இன்னமும் வழிகாட்டி நின்றாலும்
காகிதக் கப்பல்கள்தான்
கரைசேர்வதாயில்லை.
அடித்த அலைகளுக்கெல்லாம்
அள்ளுண்டுபோய்க் கொண்டு
அக்கரை சேருமுன்னமே
அழிந்து போய்விடுகின்றன..

வரலாறு என்றும்
வழிகாட்டி நின்றாலும்
அதன்வழிநின்று கரைசேரும்
வாழ்க்கைக் கப்பல்கள் எங்குமே
இங்கு இல்லை, ஐயகோ இங்கே
நல் மாலுமியுமில்லை..!

ஆதலால்தான், ஆடும் ஆட்டம்
அத்தனையும் அடங்கிடவே
மீண்டும் ஒரு பெருவெடிப்பில்
அணுத்துகளாய்ச் சிதறுண்டு
அழிவுண்டுபோவதைவிடவும்
வேறேதும் வழியுண்டோ?

*-காந்தள்-*

# உள்ளடக்கம்....

பக்கம்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் கருத்து | | 03 |
| அணியாய் எழுந்து தடைகள் தகர்ப்போம் |  | 04 |
| ஈழப் பெண்கள் |  | 06 |
| அன்னை பூபதி |  | 08 |
| வரலாற்றில் ஒரு நாள் |  | 14 |
| கடற்கரும்புலி மேஜர் மங்கை |  | 16 |
| பெண்ணியம் சிந்தனைகள் |  | 20 |
| எல்லா நாளும் பெண்கள் நாளே |  | 26 |
| சாதனைப்பெண் ரூபினி |  | 28 |
| புலிகள் ஏன் பின்வாங்கினார்கள் |  | 34 |


எழுநிலம்

Ezhunilam


## எழுநிலம்


மார்ச்–ஏப்ரல் 2022



தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com


## திருக்குறள்




குறள் எண் : 647

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

பொருள்:

தான் எண்ணியதைப் பிறர் ஏற்கச் சொல்லும் ஆற்றல் உள்ளவன், சொல்லும் செய்தி கடினமானது என்றாலும், அவன் மீது பகை கொள்வதோ வெல்வதோ சாத்தியமாகாது.

# அக்கறை உறவுகள்




எதிர்பார்ப்பைத் தூண்டி தாமதமாக வெளிவந்தாலும் புத்தகம் நன்றாக வந்திருக்கிறது. சிதைக்கப்பட்ட எங்கள் வரலாற்றையும் அதன் நாயகர்களையும் இப்போதெல்லாம் அதிகமாக நினைவு கூர்வது கண்களையும் இதயத்தையும் கலங்க வைக்கிறது. 'எல்லாமே மாறிப் போச்சு' கதை கதையல்ல, யதார்த்தம். எவ்வளவு அழகாக சொல்லியிருக்கி றார் கதாசிரியர். வாழ்த்துகள். தொட ரட்டும் உங்கள் பணி. சமூகத்தில் உள்ள பெண்கள் பிரச்சனைகளை அதிகமாக வெளிக் கொணர்வீர்கள் என்று நம்புகிறோம்.

சுந்தரமூர்த்தி குடும்பத்தினர்
சிட்னி.

ஆசிரியர் பத்தியையும் அரசியற் கட்டுரையையும் ஆரம்–பத்திலிருந்து தொடர்ந்து வாசிக்கிறேன். இலகுவாக, விளங்கிக் கொள்ளும் வகையில் வருகிறது. நல்ல எழுத்து நடை. ஒவ்வொரு தடவையும் அடுத்த பத்திரி கைக்கான எதிர்பார்ப்பைத் தூண்டுகிறது. பத்திரிகை வடிவமைப்பு முதற் தரம். நல்ல தகவல்களைத் தருகி றீர்கள். மேலும் வளர எமது ஆசிகள்.

அ திலகவதி
நெதர்லாந்து.

வெளி நாடுகளிலும், குறிப்பாக தாய் மண்ணிலும் நடக் கும் கலாசார சீரழிவுகள் வேதனையளிக்கின்றன. பெற்றோர் கண்டும் காணாமலும் இருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இதுவும் ஒருவகையில் எதிரிக்குத் துணைபோகும் செயல் தான். எத்தனையோ பேருக்கு இப்படி நடக்கிறது என்–பது தெரிவதேயில்லை. ஒவ்வொரு சின்ன விடயத்தை யும் புட்டுப் புட்டு வையுங்கள். கொஞ்சமாவது திருந்த வாய்ப்பு உண்டு.

மணிவாசகம் வாசுகி
டெக்சஸ், அமெரிக்கா.

நீண்ட காலத்தின் பின் நாட்டுக்குப் போயிருந்தேன். பலத்த எதிர்பார்ப்புடன் தான் போனேன். எதுவுமே நன்றாயில்லை. இந்த சீரழிவுகளைப் பார்த்து மன வருத்தத்துடன்தான் திரும்பினேன். வெளிநாடுகளில் உள்ள தமிழ்ப் பிள்ளைகள் நல்ல பற்றுடன் இருக்கிறார்கள். அங்கு–ள்ள இளையவர்களை கண்டிப்பாக திருத்தி எடுக்க வேண்டும். எல்லோ ரையும் சொல்லவில்லை. தப்பாக இருப்பதை சரியாக்க வேண்டும் என்ற ஆதங்கம்தான். தயுசெய்து தவறு–களை வெளிக் கொணருங்கள்.

சிறிதரன்
கிளமொன்ற், பிரான்ஸ்

எழுநிலம். சூப்பர். ஈழத்தின் தீவிர ஆதரவாளன் நான். உங்கள் பத்திரிகை எனக்கு எப்போதும் உத்வேகம் தருகிறது. பணிகள் தொடரட்டும்.

சுரேஸ்
கொளத்தூர், இந்தியா.

'சூரியப் பொங்கல்' கவிதை நிதர்சனமாக இருந்தது. நாங்கள் இழந்த ஆளுமைகளையும் அவர்களின் வரலாற்றையும் பார்த்துவிட்டு நடப்பு அரசியலையும் அரசியலைப் பாக்கும்போது அச்சமாக இருக்கிறது. இனியும் காலம் தாழ்த்தினால் எங்கள் இனத்தை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகம் தான்.

சி கௌரி
நியூசிலாந்து

மற்றைய பத்திரிகைகள் போல் நாளாந்த செய்திகளை வேறுவேறு வடிவில் போட்டு எங்களை வதைக்காமல் இருப்பதற்காக உங்களுக்கு முதல் நன்றி. அதுவே உங்கள் பத்திரிகையின் சிறப்பும் கூட. நாட்டில் நடக் கும் பிரச்சனைகளை மட்டுமல்லாமல் இங்கு நடக்கும் நல்லனவற்றையும் எழுதுங்கள். ஆயுதம் இல்லா மல் போனால் என்ன? பேனாவும் ஒரு வலிமையான ஆதாரம்தான். சிதறிக் கிடக்கும் எங்கள் இனத்தை இணைக்கும் பாலமாக உங்கள் பத்திரிகை மேன்மேலும் வளரட்டும்.

திருமலைச் செல்வன்
தாயகம்.

# சொந்தக் காலில் நிற்போம்

## ஆசிரியர் பக்கம்

கடந்த 24.02.22 அன்று ரஷ்யா உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்ததைத் தொடர்ந்து, உக்ரைன் விவகாரம் உலகின் முக்கிய பேசுபொருளாகி விட்டது. உக்ரைன் விரைவில் தம்வசமாகி விடும் என்ற ரஷ்யாவின் கணிப்பு ஆரம்பத்திலேயே ஆட்டம் காண, சுதாகரித்த ரஷ்யா தனது போர் யுக்தியை மாற்றிக் கொண்டு விட்டது. ஒவ்வொரு நகரமாக, விமான, பீரங்கித் தாக்குதல்களை கடுமையாக நடத்தி, முக்கிய இராணுவ கேந்திர ஸ்தானங்களை அழித்து, அந்த நகரங்களை முற்றுகைக்குள்ளாக்கி முன்னேறும் ரஷ்யாவின் தந்திரம் ஏறக்குறைய வெற்றி கண்டுவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

மறுபக்கம், உக்ரைனுக்கு ஆதரவாக, ரஷ்யாவிற்கு எதிரான கண்டனங்களை எழுப்பி வருகின்றன வல்லரசுகள். உக்ரைன் சண்டையை நேரடி ஒளிபரப்பாக தொடர்ச்சியாக ஒளிபரப்புகின்றன நேட்டோ நாடுகளின் தொலைக்காட்சிகள். அகதிகள் படும் அவலங்களும், குண்டு வீச்சுக்களும், காயங்களும், சேதமடைந்த கட்டடங்களும் தொடர்ச்சியாக காட்டப்படுகின்றன. சுமார் மூன்று மில்லியன் உக்ரைனிய அகதிகள் நாட்டை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். இது மிகவும் மனவருத்தம் தரும் விடயம். எங்கு மக்கள் கொல்லப்பட்டாலும், எங்கு போரினால் ஒரு அழிவு ஏற்பட்டாலும் அது கண்டனத்திற்கு உரியதுதான். இந்த மக்களின் பரிதவிப்பும் வேதனையும் எங்களுக்குப் புரிகிறது.

இதில் புரியாத விடயம் இறப்புகளிலும் அழிவிலும் பாரபட்சம் காட்டப்படுவதுதான். தொலைக்காட்சிகளில் காட்டப்படும் உக்ரைன் யுத்தத்தில் எங்கள் கண்களுக்கு உக்ரைனை விட முள்ளிவாய்க்கால்தான் தெரிகிறது. அங்கு நிகழ்ந்த மனிதப் பேரவலம் தத்ரூபமாக கண் முன்னே விரிகிறது.

உக்ரைனுக்காக கதறும் இதே நேட்டோ அமைப்பு நாடுகள்தான் அன்று சிறிலங்கா அரசுக்கு ஆயுதங்கள் வழங்கியும், நேரடியாகப் பங்குபற்றியும் எங்களை அழிப்பதில் முன்னின்றன. இன்று அழிவிற்குள்ளாகி அவலப்படும் இதே உக்ரைனிய மண்ணிலிருந்து வந்த விமானிகள்தான் எங்கள் மீது குண்டுமழை பொழிந்தார்கள். செஞ்சோலைச் சிறார்கள் 61 பேர் உக்ரைனிய பெண்விமானியின் குண்டுத் தாக்குதலில் சிதறிப் போனதை மறந்துவிட முடியுமா என்ன?

உக்ரைனில் வைத்தியசாலை ஒன்றின்மீது நடாத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல் ஒரு போர்க்குற்றம் என்று கண்டனக் குரல் எழுப்பும் நாடுகள், அன்று, மருத்துவமனை என்று குறியிட்ட இடங்களைத் தேடித்தேடி குண்டு போட்டபோது, கோயில்கள் தேவாலயங்கள் மேல் குண்டுவீசி அப்பாவி மக்களைத் துடிக்கத் துடிக்கக் கொன்றபோது, வெள்ளைக் கொடியுடன் சென்றவர்கள் கொல்லப்பட்ட போது, சரணடையப் போனவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட போது, தடுப்பு முகாம்களில் சீரழிக்கப்பட்டபோது வாயை இறுக மூடிக் கொண்டு இருந்தனர். உக்ரைன் சண்டை தொடங்கியவுடன் அங்கு பெண்கள் பெற்றோல் குண்டு செய்வதையும், இராணுவத்தில் அனைவரும் கட்டாயமாக இணைக்கப் படுவதையும் இளைய வயதினர் ஆயுதம் ஏந்துவதையும் நாட்டுப்பற்று என்று பெருமிதமாக அறிவிக்கும் இந்த நாடுகள், எங்கள் உயிரைக் காப்பாற்ற இதே நடவடிக்கையை நாம் எடுத்தபோது எங்கள் மீது கண்டனங்களை வீசியது ஏன்?

ஏனென்றால், அன்று எங்களை அழிப்பதில் மும்முரமாக நின்றவர்கள் இவர்கள்தான். ஆயுதங்களை வழங்கியும், நேரடியாக இறங்கியும் சிறிலங்கா அரசுக்கு ஆதரவாக நின்றவர்கள் இவர்கள். எங்களுக்கு நடந்த கொடுமை மேற்கு நாடுகளின் எந்த ஒளிபரப்பிலும் வெளிவரவில்லை. வெளிவர விடவுமில்லை. ஒரு இலட்சத்து நாற்பதினாயிரம் பேருக்கு மேல் இழந்துவிட்ட உறவுகளை இன்றும் நாம் தேடிக் கொண்டிருக்கிறோம். இன்னமும் ஐ.நா வாசலில் பழிகிடக்கிறோம். நிகழ்ந்தது ஒரு இனப்படுகொலை என்று சொல்ல 13 வருடங்களாகியும் இவர்களுக்கு மனது இரங்கவில்லை.

உக்ரைனுக்கு எதிரான போர்க்குற்றங்களை விசாரிக்க இப்போதே தயாராகி விட்டார்கள் இவர்கள். ஏனென்றால், ரஷ்யாவை அடக்கவும், அங்குள்ள வளங்களை அனுபவிக்கவும் அவர்களுக்கு உக்ரைன் தேவைப்படுகிறது.

உலக ஒழுங்கில், தமது தேவை என்று வரும்போது மற்றைய நாடுகளை தமக்கேற்றவாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தமக்குத்தாமே வகுத்திருக்கும் நியதியை உக்ரைன் - ரஷ்ய யுத்தத்தின் பின்னால் இருந்து மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கின்றன இந்த வல்லரசு நாடுகள். இந்த நியதியில் தப்பிப் பிழைத்து, எமது நாட்டை மீளக் கட்டியெழுப்பி, மக்களை தம் சொந்தக் காலில் நிற்க வைக்க வேண்டிய கடப்பாடு நமக்கு மட்டுமே உள்ளது.

# அணியாய் எழுந்து தடைகள் தகர்ப்போம்!

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் 21 நாட்களைக் கடந்துவிட்ட நிலையில், நாட்டை விட்டு வெளியேறிய உக்ரைனிய அகதிகளின் எண்ணிக்கை மூன்று மில்லியனைத் தாண்டி விட்டதாக ஐ.நாவின் அகதிகள் நலனுக்கான பிரிவின் புள்ளி விபரம் தெரிவிக்கிறது. மேற்குலகின் பெரும்பாலான நாடுகளும் அமெரிக்காவும் உக்ரைனிய அகதிகளுக்காக குரல் கொடுத்து, அவர்களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். உக்ரைனிய அகதிகளுக்காக உங்கள் கதவுகளைத் திறந்து வையுங்கள் என்று பிரித்தானியா தனது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. உலகமே அல்லோலகல்லோலப்படும் இந்த நேரத்தில், இலங்கையையும் அது செய்த போர்க் குற்றங்களையும் எல்லோரும் மறந்து விட்டதாகத் தெரிகிறது.

ஆனால் நாங்கள்? பாதிக்கப் பட்டவர்கள். இன்று ஓலமிடும் அத்தனை நாடுகளினதும், திரைமறைவில் அமெரிக்காவின் ஆயுத கறுப்புச் சந்தையாகச் செயற்படும் உக்ரைனினதும் கூட்டுச்சதியால் சின்னா பின்னமாகிப் போனவர்கள். இதே போன்றதொரு, ஆனால் உலகின் பார்வையிலிருந்து திட்டமிட்டு மறைக்கப்பட்ட யுத்தத்தில், ஒரு குறிக்கப்பட்டளவு கால இடைவெளியில் சுமார் ஒன்றரை லட்சம் மக்களைப் பறிகொடுத்தவர்கள். எங்களால் இந்த அவலத்தை மறக்க முடியுமா?

இன்று, வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, மீளமுடியாமல் சின்னாபின்னமாகி நிற்கிறது இலங்கை. அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சி, எந்தப் பொருட்களையும் இறக்குமதி செய்யவியலாத நிலைமைக்கு நாட்டை இட்டுச் சென்றுவிட்டது. என்றுமில்லாத அளவுக்கு விலைவாசி உச்சத்தைத் தொட்டுள்ளது. பண வீக்கம் தலைவிரித்து ஆடுகிறது. மக்கள் வாழ வழியற்று பட்டினியால் வாடுகிறார்கள். எரிபொருள் இல்லை. அதனால் நாட்டின் முக்கிய ஆலைகள் எவையும் இயங்கவில்லை. பல்கலைக்கழகங்களை முழுமை



யாக இயங்க வைக்க முடியவில்லை. பிள்ளைகள் பாடசாலைக்குப் போகும் போக்குவரத்து தடைப் பட்டுள்ளதால் பாடசாலைகள் சரிவர இயங்க முடி யாத நிலை. போக்குவரத்துப் பிரச்சனையால் பல திணைக்களங்கள் இயங்கவியலாத நிலை.

நாடு முழுவதும் 7 மணி நேரத்துக்கும் அதிக மான மின்வெட்டு. சேதனப்பசளைக்குப் பழக்கப்படாத விவசாயிகளால் அதிகளவு விளைச்சல் ஈட்டிக் கொடு க்க முடியவில்லை. உர இறக்குமதிக்கும் பண மில்லை, உணவு இறக்குமதிக்கும் பணமில்லை. பிரச்சனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். நாடு வங்குரோத்து நிலைமைக்கு வந்ததும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடப் புறப்பட்டு விட்டார்கள். தலைநகரை முற்றுகையிடும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. இந்த நிலை திடீரென்று முளைத்த-தல்ல. என்று பெரும்பான்மை இனத்தவர்கள் ஒன்றாக இணைந்து ராஜபக்ச குடும்பத்தினரிடம் நாட்டைத் தாரை வார்த்தார்களோ அன்றே சிறிலங்காவைப் பிடித்தது சனி.

புலிகளுடனான போர்தான் பொருளாதார நெருக்க-டிக்குக் காரணம் என்று மக்களை நம்ப வைத்துக் கொண்டே நாட்டுச் சொத்தையெல்லாம் குடும்பச் சொத்தாக்கியவர்கள் அவர்கள். இன்று புலிகளின் போர் முடிவுக்கு வந்து 13 வருடங்களாகியதன் பின், காலம் கடந்தேனும் மக்கள் உண்மையை உணரத் தொடங்கியுள்ளனர். நாட்டின் முக்கியமான பகுதி களை அந்நிய நாடுகளிடம் அடகு வைத்தவர்கள் ராஜபக்சே குடும்பத்தினர். கடனுக்கு மேல் கடன் வாங்கி நாட்டை மீளமுடியாத நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் அவர்கள்.

இப்போதைய நிலவரப்படி, சீனாவிடம் மட்டும் 650 கோடி அமெரிக்கன் டொலருக்கு மேல் கடன் பட்-டிருக்கிறார்கள். ஈரானிடம் எரிபொருளுக்காகப் பட்ட கடனை அடைக்க முடியாமல் தேயிலையைக் கொடுத்து கடனைத் தீர்த்துக் கொண்டிருக்கி றார்கள். போதாக்குறைக்கு நாட்டின் முக்கிய நிர்வாகங்கள் அனைத்தையும் தன்வசம் வைத்தி ருந்து இன்னமும் நாட்டைச் சுரண்டிக் கொண்-டிருக்கிறார்கள்.

ஆட்சியில் இருக்கும் ஒரு குடும்பத்திடம்

1. இலங்கை அரச நிருவாகத்தின் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவி.
2. பிரதமர் பதவி.
3. பாதுகாப்பு அமைச்சு.
4. நிதி அமைச்சு.
5. நீர்ப்பாசன அமைச்சு.
6. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு.
7. தொழில்நுட்ப அமைச்சு.
8. அமைச்சர்கள் மேற்பார்வை மற்றும் அபிவிருத்தி மேம்பாடு என்கிற அமைச்சு உருவாக்கப்பட்டு அதுவும் ராஜபக்சே குடும்ப உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டிருக்கின்றது
9. கலாச்சார மற்றும் பௌத்த மத விவகார அமைச்சு.
10. உள்நாட்டு விவகாரம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் சார்ந்த அமைச்சு.
11. உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்கு-படுத்துதல், கரிம உரங்கள், மற்றும் நெல் மற்றும் தானியங்கள், கரிம உணவு வழங்கல், காய்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளை-க்கிழங்கு உற்பத்தியை ஊக்குவித்தல், விதை உற்பத்தி தொழில்நுட்ப விவசாயம் போன்ற அமை ச்சுக்கள்.

இத்தனை அமைச்சுகளும் குடும்பச் சொத்தாக இருக்கின்றன. அதாவது இலங்கையின் திறை சேரியின் 60-70 % நிதி கட்டுப்பாடு, அதிகாரத்தில் இருக்கும் ராஜபக்சே குடும்பத்திடம் இருக்கின்றது .

இவற்றுடன், இலங்கையின் அரச நிறுவனங்களின் 40% - 50% அரச நிறுவனங்கள் ராஜபக்சே குடும்-பத்தின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன.

தமிழ் மக்களுக்கு இந்தக் கஷ்டங்கள் எவையும் புதியவையல்ல. சிங்களம் எங்களுக்குப் போட்ட அத்தனை தடைகளுக்கு மத்தியிலும், அத்-தனை குண்டு வீச்சுகளுக்கு மத்தியிலும் எங்கள் தலைவனின் உறுதுணையுடன், தற்சார்பு பொருளா தாரத்தை வெற்றிகரமாகத் திட்டமிட்டுக் கட்டி-யெழுப்பி, அதற்காகப் பாடுபட்டு, தம் சொந்தக் காலில் நின்று வாழ்க்கையைக் கொண்டு நடத்திய-வர்கள் எமது மக்கள். மீண்டும் சுய பொருளாதாரத் தைக் கட்டியெழுப்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. புலம்பெயர் தேசத்திலுள்ள எம் மக்கள் அனை-வரும் ஒன்றாக நின்று தாயகத்தில் தற்சார்பு பொரு ளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். உக்ரைனில் நடைபெறும் யுத்தத்தை எங்களுக்குச் செய்யப்பட்ட துரோகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நாங்கள் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடத்தப்படுவது தெளிவாகத் தெரிகிறது. இந்த நிலையில் வெளியிலிருந்து வந்து யாரும் எங்கள் நாட்டைக் கட்டியெழுப்பப் போவதில்லை என்பதை மனதிற் கொண்டு களத்தில் இறங்குவோம்.

- பாரி

# உலக வரலாற்றில் ஈழப் பெண்கள்



உலக வரலாற்றில் மார்ச் 8 ஐ பெண்கள் நாளாகப் பிரகடனப்படுத்தி பல்லாண்டுகள் ஆகிவிட்டன. இந்த ஒரு அங்கீகாரத்தைப் பெறு-வதற்காக அந்த நேரத்தில் பெண்கள் பட்ட துன்பங் களும் துயரங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. பல்வேறு போராட்டங்களின் பின் பெண்களுக்குக் கிடை-த்த இந்த அடிப்படை உரிமைகளோடு பெண்களின் பிரச்சனைகள் முடிவுக்கு வந்து விட்டதாக பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதில் துளிகூட உண்மையில்லை.

உலகின் எந்த மூலையில் இருந்தாலும், சமுகத் தில் எந்தத் தரத்தில் இருந்தாலும் பெண்களின் நாளாந்த வாழ்க்கை பெரும் போராட்டத்துடன் தான் நடந்து கொண்டிருக்கிறது. உடலியல் ரீதி யில் மெல்லியளாக படைக்கப்பட்டிருப்பதை அவ ளின் பலவீனமாகக் கருதி, பாலியல் பலாத்காரங்-களையும் அத்துமீறல்களையும் அவளை அடக்கும் கருவியாகக் கையிலெடுத்திருக்கும் ஆண் வர்க்-கத்திலுள்ள குறிப்பிட்ட சதவீதத்தினர் வெட்கித் தலை குனியவேண்டும். பெண்ணின் கரு முட்டையி



லிருந்து, அவளின் கருவறையை வாழ்விடமாகக் கொண்டு வளர்ந்த ஒரு சிசு, ஆண் என்ற அகம் பாவத்துடன் வளர்ந்து இன்னொரு பெண்ணிற்கு கொடுக்கும் பாலியல் சித்திரவதை இன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் முக்கிய இடத்தை வகிக்கிறது.

வீட்டுக்கு வெளியிலும் வீட்டிலும் தமக்கு நிகழ்த்தப்படும் பாலியல் துஷ்பிரயோகங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசவோ இன்னொருவரிடம் பகிர்ந்து ஆலோசனை பெறவோ பெண்கள் அச்சப்படுகின்றனர். சமுதாயத்தில் தம்மை ஒதுக்கி விடுவார்கள், சுட்டிக் காட்டப்படும் ஒரு ஆளாக மாறி விடுவோம் என்ற பயத்தில் படித்த, பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூட பேசப் பயப்படுகிறார்கள். கீழ்த்தரமாக செயலைச் செய்பவர்களே சமுகத்தில் நல்லவர்கள் வேடம் போடும்போது எந்தத் தவறுமே செய்யாத இவர்கள் ஏன் வெட்கப்பட வேண்டும்?

எமது நாட்டைப் பொறுத்தவரை சாதிய முறைமை பெண்களைப் படு மோசமான நிலைமைக்குத் தள்ளியிருந்த காலமும் ஒன்றிருந்தது. அந்த நேரத்தில் தாழ்ந்தவர்கள் என்று முத்திரை குத்தப்பட்ட பெண்கள் மேலாடை அணிவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது மட்டுமல்லாமல், அவர்கள் உயர்சாதி ஆண்வர்க்கத்தின் போகத்துக்கும் மோகத்துக்கும் பலிக்கடாவாக்கப்பட்ட நிலையும் இருந்தது. பிறிதொரு காலத்தில், ஆண் துணையின்றி ஒரு பெண் வெளியே செல்வது கௌரவக் குறைவாகவும், அப்படி வெளியே செல்லும் பெண் தரங்கெட்டவளகப் பார்க்கப்படும் நிலையும் இருந்தது.

'கற்பு நிலையென்று சொல்ல வந்தால் - இரு கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்'

என்று பாரதியும்,

'என்று ஒரு பெண் இரவில் தனியாக ஊருக்குள் நடமாட முடிகிறதோ அன்றுதான் நாட்டுக்கு உண்மையான சுதந்திரம்'

என்று காந்தியும்

சொல்லிச் சென்றதை இந்நாளில் நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்டியவர்கள் எமது பெண்கள்.

இரவில் பெண்கள் வீட்டிற்கு வெளியே செல்லக் கூடாது என்ற பழமைவாதம் உடைத்தெறியப்பட்டு விட்டது. எம்மைத் தாக்க வரும் எதிரியை இரவு பகலாகக் கண்காணித்து, வழிமறித்துத் தாக்கி, போர் செய்யும் வல்லமை கொண்டவர்கள், எதையும் தாங்கும் நெஞ்சுரம் மிக்கவர்கள் நாம் என்ற உண்மையை நடைமுறையில் காட்டியவர்கள் எமது



பெண்கள்.

1985 ஆகஸ்ட் 18 அன்று, விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பயிற்சி முகாமில் ஆரம்பித்து, களத்திலும் தளத்திலும் எமது பெண்கள் செய்த சாதனைகளும் உயிர்த் தியாகங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்கள் ஈழத்தில் அதை அரங்கேற்ற, உலகமே அவர்களை வியந்து பார்க்கிறது. இன்று உலகில் நடைபெறும் எத்தனையோ விடுதலைப் போராட்டங்கள், இந்த சாதனைப் பெண்களை உன்னிப்பாகக் கவனித்து, அவர்களை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்று சொல்வார்கள். எங்கள் ஈழத்துப் பெண்களின் வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் பின்னால் ஒரு தலைசிறந்த ஆண்மகன் இருக்கிறார். எங்கள் பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்று எங்களில் நம்பிக்கை வைத்து, ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து, தளம் அமைத்துக் கொடுத்த எங்கள் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் தான் அந்தப் போற்றுதலுக்குரிய மனிதர். அனைத்துலக பெண்கள் நாளான இன்றைய நாளில், சிரம் தாழ்த்தி அவருக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டமல்ல. அது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்.'

'பெண் விடுதலையானது சமுக, அரச ஒடுக்கு முறைகளிலிருந்தும், பொருளாதார சுரண்டல் முறையிலிருந்தும் விடுதலை பெறுவதாகும்.'

**'பெண்களை மதிக்க வேண்டும் என்பதை ஆண் குழந்தையிடம் சொல்லி வளர்க்க வேண்டும். அதில் பாதிப் பங்கு பெண்களுக்கும் உண்டு.'**

**- நல்ல நாச்சாள்**

# தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாள் - அன்னை பூபதி எமை விட்டு பிரிந்தநாள்

உலகின் எந்த மூலையில் ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெற்றாலும், அங்கு நாட்டுப்பற்றாளர்களின் பங்கு அளப்பரியதாக இருந்திருக்கும். மக்களை உயிர்ப்புடன் வைத்து, ஒரு உந்து சக்தியாக மாற்றுவதில் விடுதலைப் போராளிகளுக்கு இணையாகச் செயற்படுபவர்கள் இவர்கள். தம் தாய்நாட்டின் மீது வைத்திருக்கும் அளவு கடந்த பற்றினாலும் பாசத்தினாலும் தம் தாய் மண்ணில் ஒரு மாபெரும் சக்தியாக விளங்கு-பவர்கள் இந்த நாட்டுப்பற்றாளர்கள். வீரம் செறிந்த விடுதலைப் போராட்டம் மூலம் உலகின் பலம் பொருந்திய நாடுகளுக்கே சவாலாகவிருந்த எங்கள் தாய்மண்ணின் உணர்வாளர்கள் மட்டும் சளைத்தவர்களா என்ன? இவர்களில் அன்னை பூபதி முதன்மையானவர்.

03.11.1932 அன்று மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்தவர் பூபதியம்மா. பிறப்பிலேயே அசாதா ரணமாகப் பிறந்து சாதித்துக் காட்டியவர் என்று அதற்குப் பொருளல்ல. மற்றவர்களைப் போல, சண்டையும் சச்சரவும் அன்பும் ஆதரவும் என்று ஒரு சாமானியனின் குடும்ப வாழ்க்கை வாழ்ந்தவர் பூபதியம்மா. பத்துக் குழந்தைகளைப் பெற்றெடு-த்து, வளர்த்து ஆளாக்க ஒரு அம்மாவாக, குடும்-பத் தலைவியாக தன் வாழ்நாளின் பெரும் பகுதி யைக் கழித்தவர்.





சமுக சேவைக்காகவும் இடையில் நேரம் ஒதுக்கி, அன்னையர் முன்னணியில் இணைந்து பணியாற்றியவர். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படையாக வந்தவர்களுக்கும் இடை யில் கடுமையான சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். இந்தியப் படைகள் அப்பாவி மக்களைக் கொன்றும், கைது செய்து சித்திரவதை செய்தும் வெறியாட்டமாடிக் கொண்டிருந்த காலம். பாதி-க்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுத்தது அன் னையர் முன்னணி. போராட்டங்களை நடத்தியது. 04.01.1988 அன்று அவர்கள் நடத்திய அடையாள உண்ணாவிரதத்தின் பின், அவர்களுடன் பேசு-வதற்கு திருமலைக்கு அழைத்தது அமைதிப்படை. அங்கு எந்தத் தீர்வும் கிட்டவில்லை. 10.02.1988 அன்று மீண்டும் கொழும்பில் நடத்திய பேச்சு-க்களும் தோற்றுப் போனது. இதனால், சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதாக அன் னையர் முன்னணி முடிவெடுத்தது.

மட்டு - அம்பாறை அன்னையர் முன்னணி உறுப்பி னரான பூபதியம்மா தானே சாகும்வரை உண்ணா

விரதத்தில் இறங்குவதாக சுய விருப்பத்துடன் முடிவெடுத்தார். தனக்கு என்ன நடந்தாலும் தனது கணவரோ, தனது குழந்தைகளோ அல்லது வேறு யாருமோ தன்னை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லக் கூடாது என்று தனது கைப்பட, சுய சிந்தையுடன் எழுதிய கடிதத்துடன், 19.03.1988 அன்று, நீர் மட்டும் அருந்திய, சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார் பூபதி அம்மா.

- உடனடியாக போர்நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண வேண்டும்.

என்ற இரண்டு கோரிக்கைகளுடனும் வாடி வதங்கிய பூபதியம்மாவை இந்தியப் படைகள் காப்பாற்றவோ கோரிக்கைகளை நிறைவேற்றவோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பதிலுக்கு, பெருகிக் கொண்டிருக்கும் மக்கள் ஆதரவை மழுங்கடித்து உண்ணாவிரதத்தைக் குழப்ப பிரயத்தனப்பட்டனர். பூபதியம்மாவின் பிள்ளைகளிற் சிலரையும் ஆதரவுக் கரம் கொடுத்த பலரையும் கைது செய்து இழுத்துச் சென்றனர். முப்பத்தியொரு நாட்கள் வயிற்றில் பெருநெருப்புடன் நெஞ்சுரத்துடன் இருந்த பூபதியம்மா 19.04.1988 கோரிக்கைகள் எதுவும் நிறைவேறாமல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அவர் வயிற்றிற் கனன்ற நெருப்பு மக்கள் மனங்களில் கொழுந்து விட்டு எரிந்தது.

தன்னுடைய குழந்தைகளைப்போல மற்றவர்களிடமும் பரிவு காட்டிய அந்தத் தாய் தமிழீழத்தின் அன்னையானார். அவர் எங்களை விட்டுப் பிரிந்த நாளே தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**- அங்கவை**

## முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு



முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1966ம் ஆண்டு 16ம் திகதி முதல் 23ம் திகதி வரை மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றது. நிகழ்விற்கு வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் அவர்களின் பங்கு மிக முக்கியமாக இருந்தது.

# இது ஒரு வரம்!



மங்கையர் தினமதில்
மானிடராய் பிறப்பதே வரம்!!
அதிலும் மங்கையராய் பிறப்பதே மகா தவம்..!!
வலிகளையும் வழிகளாய் மாற்றி சரித்திரம்
படைக்கும் நம் பெண்கள் – நம்
இனம் என்பதில் சொல்லற்ற மிடுக்கு!!..

ஓர் இனம் உருவாக வழி செய்கிறாள்..
பல கணமும் வலி பொறுக்கிறாள்..
வீழ்கின்ற போதெல்லாம்
தன்னைத்தானே தோள் தட்டிக் கொடுத்தும்
எழுந்து நின்றும் சாதனை தொடுக்கின்றாள்..
எண்ணற்ற சாதனைகள்
விளையாட்டு துறையிலும் சரி
விண்வெளியிலும் சரி.. ஏன்,
கல்வித் துறையிலும் கூட..
பல இன்னல்களையும்
தகர்த்தெறிந்து
சாதித்துக் கொண்டிருக்கும்
நம் இனம் என்பதில்
எனக்குமோர் மிடுக்கு!!
'அனைத்து பெண்களுக்கும்
உலக மகளிர் தின வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்..'

**- சிந்து**

# இவர்களுக்கு சோல்லியா கொடுக்க வேண்டும் ???



**சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட வெளிநாட்டு உதவிகள் கிடைத்தவுடன் அதனை நாட்டுக்கு விடுதலை கிடைத்தது போல் காட்டி இந்த போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்வார்கள்**

இலங்கை அரசு காலிமுகத்திடலில் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்களை சரியாக கையாள்கிறது என்றே தோன்றுகின்றது. கடந்த காலங்களில் ராஜபக்ஷ குடும்பத்துடன் மிக நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்தவர்கள், இலங்கை அரசை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இருந்து காப்பாற்றிய NGO கள் அதன் தலைவர்கள் என பலர் இந்த ஆர்ப்பாட்டங்களை வழிநடத்தி வருகின்றனர்.

இலங்கை அரசுக்கு எதிராக மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கப் போகிறது என்பது இலங்கையில் உள்ள ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு ஏற்கனவே நன்கு தெரியும். குறித்த ஆர்ப்பாட்டங்களை தடுக்க முடியாது என்றும் அவர்களுக்கு தெரியும். அதனால் ஆர்ப்பாட்டங்களை எவ்வாறு கையாள்வது என்ற தந்திரோபாயங்களை நடைமுறைபடுத்தியது. அதாவது ஒரு சம்பவம் நடக்கப்போகிறது என்று தெரிந்து கொண்டு அதனை முன் கூட்டியே செய்வது. அதன் ஒரு கட்டம் தான் மீரிகம சம்பவங்கள். அதனால் எந்த பிரியோசனமும் இல்லாத நிலையில் தற்போது கடந்த ஆட்சியில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நல்லாட்சி அரசு கையாண்ட அதே உத்தியை தற்போது ராஜபக்ஷ அரசு கையாள்கிறது.









ஆர்ப்பாட்டங்களுக்கும், போராட்டக்காரர்களின் உணர்வுகளுக்கும் வழியேற்படுத்திக் கொடுத்து அவர்களை தங்களது முகவர்கள் ஊடாக வழி நடத்துவது. இதைத்தான் இலங்கை அரசு தற்போது வரை செய்து வருகிறது. கடந்த காலங்களில் காணாமல் போன அம்மாக்களை சில வெளிநாட்டு உள்நாட்டு NGO கள் அவ்வாறே கையாண்டனர். காணாமல் போன உறவுகளின் அம்மாக்களும் தங்களுக்கு ஒரு நீதி கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவர்களின் பின்னால் கொழும்பிற்கும், வடகிழக்கிற்குமாக அலைந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அவருடைய மெதுவாக சாகடித்தல், அல்லது எதிர்பார்த்துக் களைத்துப் போதல் என்ற தந்திரத்தின் ஊடாக சர்வதேசம், ஜெனிவா உட்பட தமிழ் கட்சிகள் மற்றும் தமிழர்களையும் ஏமாற்றினார். அதே தந்திரங்களே அதே செயற்பாடுகளே தற்போது காலி முகத்திடலில் அரங்கேற்றப்படுகிறது. எல்லாம் நடப்பது போல் இருக்கும் ஆனால் எதுவும் நடைபெறாது. ஆனால் காலி முகத்திடல் ஒரு சுதந்திரமான போராட்டக்களமாக தொடரும்.

அங்கு வன்முறையோ, இராணுவ, பொலிசாரின் அழுத்தங்களோ இப்போதைக்கு வரப்போவதில்லை. அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப போராட்டம் நடைபெறும் வரை எதுவும் நடக்காது. மறுபுறம் இலங்கையில் ஏற்பட்டுள்ள உடனடி பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்தி விட்டு ஆர்ப்பாட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு அரசு அறிவிக்கும். இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட வெளிநாட்டு உதவிகள் கிடைத்தவுடன் அதனை நாட்டுக்கு விடுதலை கிடைத்தது போல் காட்டி இந்த போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்வார்கள். வரிசையில் மக்கள் இல்லாமல் போகும் போது இந்த போராட்டங்களும் இல்லாமல் போகும் என்பதை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நன்கு தெரிந்து வைத்துள்ளார். ஏமாற்ற அவர்களுக்கு சொல்லியா கொடுக்க வேண்டும்.

**- சத்தியேந்ரா**

# ஊழித்தாண்டவம்



இந்தப் பிரபஞ்சத்தின் மீதான
என் கோபம்
என்னை
ஊழித்தாண்டவம்
ஆடவைக்கிறது
பேதையென பெண்களை
இழிவாக எண்ணி
மேனி நடுங்க வைக்கும்
அற்ப பதர்கள் மீது
அழியாக் கோபம்
கொண்டு
ஆடிடும்
ஊழித்தாண்டவம் இது.

பெண்ணாக
பிறந்ததினால் பட்ட
சோதனை
வேதனைகள்
ஆயிரம்!
அத்தனை
தடைகளையும்
தாண்டி வந்தால்
அதற்கும் ஒரு பெயர்.
எத்தனை துன்பங்கள்?
சொல்லிட மொழியில்லை..
கேட்டிட இங்கு எவரும்
ராமனுமில்லை.

ஜாதி என்ற பெயரில்
தீண்டத் தகாதவர் என்ற பெயரில்...
மமதை கொண்டு
எண்ணிலடங்கா
பாலியல் வன்கொடுமை
உலகெங்கிலும்
நடைபெறுகின்ற கொடுமை
ஊழித்தாண்டவம் ஆடிடும்
என் காலில் சலங்கை சத்தம்
இரத்த வெறிபிடித்த
அற்ப பதர்களை
அழித்திடும் வரையில்
பரதமாடும் என் கால்கள்
ஓயப் போவதில்லை

என் ஊழித்தாண்டவ தீயில்
உலகம் எரிந்து
சாம்பலாகட்டும்.

மீண்டும் ஒரு புனித உலகம்
உதயமாகட்டும்.
பெண்மையை போற்றி
தாய்மையை மதிக்கும்
பொற்காலம் உதயமாகட்டும்.
அதுவரை சலங்கை கட்டிய
என் கால்கள் ஓயப் போவதில்லை!


- அம்முக்குட்டி




1857 மார்ச் 8 தொடக்கம் மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்று பெண்கள் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்து, மிக உயர்வான இடங்களில், பொறுப்புமிக்க பதவிகளை வகித்து, வீட்டுக்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்கிறார்கள் என்றால், அதற்கு வித்திட்டது பல்வேறு போராட்டங்களும் அவற்றின் வெற்றிகளுமே ஆகும். ஆனால் அன்று இவ் வெற்றிகள் எளிதாக கிடைக்கவில்லை. மார்ச் 8 என்பது ஆணாதிக்க சமுகத்திலிருந்து பெண்கள் தம் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை உலகிற்கு எடுத்துச் சொல்லும் நாள். இந்நாள் பெண்கள் தினமாக அனுஸ்டிக்க ஒரு வரலாறே உண்டு.

1789ம் ஆண்டு யூன் 14ம் திகதி சுதந்திரம், சமத்துவம், பிரதிநிதித்துவம் கோரி பிரெஞ்சு புரட்சியில் பாரிஸில் பெண்கள் போராடினார்கள். அதாவது தங்களுக்கான சமுதாய உரிமைகள், எட்டுமணி நேர வேலை, பெண்களுக்கான வாக்குரிமை, அடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலையென பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் போராடினர்.

1910 ம் ஆண்டு பெண்கள் உரிமை மாநாடு டென்மார்க் கோபன்ஹேகனில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் உலகநாடுகளைச் சேர்ந்த பல பெண்கள் தம் உரிமைக்காக கை கோர்த்து ஒற்றுமையாக நின்றனர். இதில் கலந்து கொண்டவர்களில் ஒருவரான ஜேர்மனிய நாட்டைச் சார்ந்த புரட்சிப் பெண் கிளாரா ஜெட்கின், பெண்கள் உரிமைகளைப் பேச உலகம் முழுவதும் ஓர் குறிப்பிட்ட




நாளை கடைப்பிடிக்க வேண்டும் என கருதி தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற முயற்சி செய்தார். ஆனால் பல்வேறு காரணங்களால் அந்த தீர்மானம் நிறைவேறவில்லை. அடுத்தடுத்த ஆண்டுகளில், ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தினத்தில் மகளிர் தினத்தை கொண்டாடி வந்தனர்.

1917 இல் ரஷ்ய தொழிலாளர்களினால் முன்னெடுக்கப்பட்டது ஒரு பெரும் புரட்சி. இப் புரட்சியின் விளைவாக ரஷ்ய மன்னர் ஜார்ஜ் ஆட்சியே கவிழ்ந்தது என்பது வரலாறு. 1920 ஆண்டு சோவியத் ரஷ்யாவிலுள்ள செ ன் பீட்டர்ஸ் என்ற நகரத்தில் நடந்த பெண்கள் போராட்டத்தில் ரஷ்யாவை சார்ந்த அலெக்சான்ரா கிளாரா என்ற பெண் கலந்து கொண்டார். இவர் இதில் புரட்சி நடாத்திய ரஷ்ய பெண்கள் சார்பாக அந்த பெப்ரவரி மாதத்தின் கடைசி ஞாயிறை பெண்கள் நாளாகக் கொண்டாட கோரிக்கை வைத்தார். இறுதியில் மார்ச் 8 மகளிருக்கான நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து, மார்ச் 8 உலக மகளிர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

# வரலாற்றில் ஒரு நாள்







இலைகளின் சலசலப்பு. காற்றில் சொகுசாக அசைந்தாடிக் கொண்டிருக்கும் மரங்கள். தூரத்தில் இனிமையாகக் கேட்கும் முகம் தெரியாத பறவைகளின் கதம்ப ஒலி. எப்போதாவது கேட்கும் மிருகங்களின் உறுமல். இவை தவிர, தமக்குள் சண்டையிட்டு இடையிடையே கிரீச்சிடும் குரங்குகள். மனதை அள்ளும் காட்சிகள்.

இது 1988 இன் ஆரம்பகாலப் பகுதி. மணலாற்றுக் காட்டின் உட்புறம் இவ்வாறு அமைதியும் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகளும் நிறைந்ததாக அமைந்திருக்க, அதே நேரத்தில், கிராமங்கள் நகரங்கள் என்ற வேறுபாடு இல்லாமல் இந்திய இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்களும் துப்பாக்கிச் சன்னங்களும் எங்கள் மக்களின் உயிரைக் குடித்துக் கொண்டிருந்தன. அதற்கு எதிரான பதில் தாக்குதல்களை புலிகளும் நடத்திக் கொண்டிருந்தனர்.

தாக்குதல்களை திட்டமிட்டு நடத்தவும், பாதுகாப்பை உறுதி செய்யவும் எமது தலைவர் மணலாற்றுக் காட்டில் தற்காலிக நிலையெடுத்திருந்தார். அவருடன் ஒரு குறிக்கப்பட்டளவு ஆண், பெண் போராளிகளும் அங்கு தங்கியிருந்தனர். தலைவருடனேயே ஒரேயிடத்தில் தங்குவது போராளிகளிற் பெரும்பாலானவர்களுக்கு இதுதான் முதற் தடவை. அதற்கு முன் முகாம்களிற்கு தலைவரே வந்து சந்தித்து கலந்துரையாடி ஒரு சில மணிகளை செலவழிப்பதுதான் வழமை. தேசியத் தலைவரின் பழக்க வழக்கங்கள் பற்றி அடுத்தவர் சொல்லிக் கேள்விப்பட்டது போக இப்போது நேரிலே அவற்றைப் பார்க்கக் கிடைத்த அருமையான சந்தர்ப்பம்.

காடு அமைதியாக இருப்பது போல தோற்றம் கொண்டிருந்தாலும் அங்கு உள்ளே போராளிகள் எறும்புகள் போல வேலை செய்து கொண்டிருந்தனர். அவ்வளவு பேருக்குமாக, இரண்டு மூன்று அரண்களாக முகாம்கள் அமைப்பதிலும், அவற்றை உருமறைப்பு செய்வதிலும் ஒரு பிரிவு தீயாக வேலை செய்ய, அடுத்த கட்ட தாக்குதல்கள், பயிற்சிகள், தண்ணீருக்காக கிணறுகள் தோண்டுவது, இவற்றுடன் தாக்குதலுக்கான குண்டுகள் தயாரிப்பது என்று மற்றையவர்கள் பிரிந்தும் ஓய்வின்றி வேலை செய்தனர். இடையிடையே போராளிகளின் பொழுதுபோக்குக்காக நாடகங்கள், கவிதைகள், வில்லுப்பாட்டு, பாட்டு என்று நிகழ்வுகள் வேறு.

தேசியத் தலைவர் போராளிகளுக்கு இடையே தானும் ஒருவராக நின்று வேலைகள் செய்வார். அவருடைய மதிநுட்பமும் பின்னாளில் நடக்கவிருப்பதை முன்பே யோசித்து அதற்காக அவர் வகுக்கும்

## வரலாற்றில் ஒரு நாள்

வியூகங்களும், போராளிகளைப் பிரமிப்பிற்கு உள்ளக்கியதுடன், அடுத்த கட்டத் தாக்குதல்களுக்கான பயிற்சிகளாகவும் தப்பி உயிர் வாழ்தலுக்கான பயிற்சிகளாகவும் இருந்தன.

தலைவர் மிகவும் எளிமையானவர். ஆடம்பரங்கள் எதுவுமின்றி மிகச் சிக்கனமான ஒரு வாழ்க்கையை வாழும் ஒரு உன்னதமான மனிதர். காட்டுக்குள் இருந்தபோது தலைவரிடம் இரண்டு சீருடைகள் மட்டுமே இருந்தன. அவற்றில் வரும் கிழிசல்களை அவரே தைத்து, துவைத்து அணிந்து கொள்வதை நாங்கள் கண்கூடாகவே பார்த்திருக்கிறோம். ஒரு மாபெரும் விடுதலைப் போராட்டத்தின் தலைவர் என்பதற்காக அவர் ஒருபோதும் தன்னுடைய தனிப்பட்ட வேலைகளைச் செய்ய யாரையும் அனுமதித்ததில்லை. சற்றுக் கூடுதல் பொறுப்புகள் நிறைந்த ஒரு போராளியாகத்தான் அவர் தன்னையும் கருதினார். யாரையும் ஒருமுறை மட்டுமே சந்தித்தாலும் அவரை அப்படியே ஞாபகத்தில் வைத்திருக்கும் திறன் கொண்டவர் தலைவர். அந்தக் காட்டினுள் ஒரே நேரத்தில் பல போராளிகளுடன் தங்கியபோது ஒவ்வொருவரைப் பற்றியும் தனித்தனியே அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது அவருக்கு.

ஒரு தனிமனிதன் ஒரே நேரத்தில் ஒரு தாயாகவும் தந்தையாகவும் ஒரு மூத்த அண்ணனாகவும் எல்லோர் மீதும் பரிவும் பாசமுமாக இருப்பதைப் பார்த்த எந்தப் போராளியால்தான் அவரை நேசிக்காமல் இருக்க முடியும்? அவருக்கும் போராளிகளுக்குமான உறவு தலைவர் – போராளிகள்





என்ற உறவையும் தாண்டி மிகவும் நெருக்கமானது. காட்டில் இருந்தபோது, ஏதாவது ஒரு கொட்டகையில் இருமல் சத்தம் கேட்டால் போதும், உடனே அந்தப் பிரிவுக்குப் பொறுப்பானவரைக் கூப்பிட்டு கவனிக்கச் சொல்லிவிடுவார். அந்தப் போராளிக்குக் குணமாகும் வரை தலைவரின் கண்காணிப்பு இருக்கும். இடையிடையே போராளிகளுக்கான சமையலையும் செய்து அசத்துவார் தலைவர்.

பலருக்கும் தெரியாத விடயம், தலைவர் நிதி விவகாரங்களை கையாள்வதில்லை. அதற்குப் பொறுப்பாக இருந்த தமிழேந்தி அப்பா என்ன சொல்கிறாரோ அதற்கு அவரும் கட்டுப்படுவார். அவரின் கடைசிப் பிள்ளை பாலச்சந்திரன் சிறுவனாக இருந்த நேரம். தந்தையை ‘அப்பா! வரும்போது சொக்கிளேற் வாங்கி வாறீங்களா?’ என்று ஆசையாகக் கேட்பான். ‘தமிழேந்தி அப்பா இன்னும் காசு தரேல்லை. தந்த பிறகு வாங்கித் தாறன்.’ என்பதுதான் அவரின் பதிலாக இருக்கும். இயக்கத்தில் திருமணமானவர்களுக்கு குடும்பச் செலவுக்காக மாதாந்தக் கொடுப்பனவு கொடுக்கப்படுவது வழக்கம். தலைவருக்கும் அதே நியதிதான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

மக்கள் சேவைக்காக பொது வெளியில் இறங்கிய எங்கள் அரசியல்வாதிகளும் அரசியல் செய்யத் துடிப்பவர்களும் தம்மிலும் தமது குடும்ப நலனிலும் தமது பேர் புகழிலும் மட்டுமே கண்ணாயிருக்கிறார்கள். எத்தனை பேர் மக்களுக்காக உண்மையாகவே வாழ்கிறார்கள்? தலைவரின் அறமும் நெறியும் இவர்கள் எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாகட்டும்.

# கடற்கரும்புலி
# மேஜர் மங்கை



## கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி. வடமராட்சி கிழக்கு (16.12.65 – 19.09.94)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியிற் பிறந்தவர் புவனேஸ்வரி. தாய்நாட்டுக்காக போராட முடிவெடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டபோது, "சாந்தி" என்ற பெயர் அவருக்கு வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் அவர் மகளிர் பிரிவின் அரசியற் பிரிவில் இணைக்கப்பட்டிருந்தார். வலிகாமத் தின் சண்டிலிப்பாய், அளவெட்டி, தெல்லிப்பளை பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்து வேலை செய்யுமாறு அவருக்கு வேலைத்திட்டம் கொடுக்கப்பட்டிருந்தது. வலிகாமத்தின் அனைத்துப் பகுதி களிலும் வேலை செய்த போராளிகள் அனைவரும்




ஊரெழுவிலுள்ள முகாமை தமது தங்குமிடமாகக் கொண்டு வேலை செய்தனர். அங்கிருந்துதான் தத்தமது பிரிவுகளுக்குப் போய் வரவேண்டும். அந்த நேரத்தில் துவிச்சக்கர வண்டிகளும் போதுமான அளவில் இருக்கவில்லை. சாந்திக்கு சைக் கிள் ஓடவும் தெரியாது. மற்றவர்கள் வரும்வரை காத்திருக்காமல் பொடி நடையாகவே தனது பிர தேசத்திற்குக் கிளம்பிவிடுவார் சாந்தி.

வழி நீளம் தன்னுடைய பிரதேசத்திலுள்ள மக்களுடன் கதைத்து, அவர்களின் பிரச்சினைகளை முடிந்தவரை தீர்த்து வைப்பது அவரது வழமை. எப்போதும் மக்களுக்கிடையே, அவர் களில் ஒருவராக இருந்து வந்ததால் அவர் நன்கு அறியப்பட்டவராக இருந்தார். முகாமில் அவருடன் தங்கியிருந்த போராளிகளைவிட அவர் சில வரு டங்களே மூத்தவராக இருந்தாலும், சாந்தியின் முதிர்ச்சியும், தெளிவான பார்வையும், கனிவும் கண்டிப்புமான ஒரு அம்மா ஸ்தானத்துக்கு அவரை உயர்த்தியிருந்தது. முகாமில் போராளிகளுக்கிடை யில் சில சமயம் பகிடியாகவும் சில சமயம் உண்மை யாகவும் சூடான கருத்துப் பரிமாற்றம் நிகழும் போது, சாந்தியக்கா தலையிட்டு 'போதும்' என்பதுடன் அத்தனை சூடும் நீர்த்துப் போகும். சாந்தி யின் பேச்சுக்கு எல்லோரும் கட்டுப்படுவார்கள். இத்தனைக்கும் அவர் யாரையும் கடிந்து பேசிய தில்லை.

சாந்தி, தனது பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் இருக்கும் யாரைப் பற்றிக் கேட்டாலும் ஞாபகத்தி லிருந்து சொல்லக் கூடியவராக இருந்தார். தான் தான் பொறுப்பாளர் என்று இல்லாமல் மக்களுக் கும் வேலைகளைப் பிரித்துக் கொடுத்து எல்லோரு க்கும் ஒரு முன்னுதாரணமாக இருந்தவர் சாந்தி.

(பின்னாளில் இவர் 'மங்கை' என்று பெயர் மாற்றப்பட்டார்)

கற்பிட்டிக் கடலில் கடற்கரும்புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட
'சாகரவர்த்தனா' கட்டளைக் கப்பல்



அளவெட்டிக்குளம் தூர்வாரப்பட வேண்டும் என்று முடிவெடுத்த போது நானும் எங்கள் பிரதேச மக்களும் சேர்ந்து இந்த வேலையை முடிப்போம் என்று உறுதியுடன் கூறிய மங்கை அவ்வாறு செய்தும் காட்டினார். வேலை செய்த அனைவருக்கும் நாளின் முடிவில் நிவாரணப் பொருட்கள் வழங்கி அவர்கள் மனதைக் குளிர்வித்தார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தெல்லிப்பழை 'துர்க்காபுரம்' கிராமத்தில் மங்கையை தினசரி பார்க்கலாம். ஷெல்லடிகளுக்கும் துப்பாக்கிச் சூடுகளுக்கும் மத்தியில் தன்னுடைய பாதுகாப்பையும் பொருட்படுத்தாது மக்களோடு மக்களாக நின்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவார் மங்கை. நாளாந்தம் அவர்கள் படும் அவதி, மங்கையை ஒரு தீர்க்கமான முடிவெடுக்க வைத்தது.

தலைமைக்கு கடிதத்தின் மேல் கடிதம் எழுதினார். அவரின் வேண்டுதல்களுக்கான பதில் தலைமையிடமிருந்து வந்தது. கடற்புலிகளில் இணைத்துக் கொள்ளப் பட்டார் மங்கை. 01.03.92 இல் முதன்முதலாக மகளிர் கடற்கரும்புலிகள் அணி உருவாக்கப்பட்ட போது மங்கையும் அதில் ஒருத்தியானார். கடலிலும் தரையிலும் கடுமையான பயிற்சிகள். அத்தனையிலும் சளைக்காமல் ஈடுகொடுத்தார் மங்கை. அது மட்டுமா? அவர் ஒரு மிகச்சிறந்த படகோட்டியாகவும் இருந்தார். மங்கை ஓட்டிச் செல்லும் படகு இலக்குத் தவறாது குறித்த இடத்தை அடையும் என்ற பெயர் அவருக்கிருந்தது. படகின் இயந்திரம் பழுதுபட்டால் 'மங்கையைக் கூப்பிடுங்கள்' என்று சொல்லுமளவுக்கு தொழில் நுட்பத்திலும் வல்லவரானார். இத்தனைக்கும் மங்கையின் பாடசாலை வாழ்க்கை சொற்ப காலந்தான்.

போராளிகளுக்கு நீச்சல் கற்பிப்பதிலும் தப்பி உயிர்வாழும் உத்திகளைச் சொல்லிக் கொடுப்பதிலும் முன்னின்றார் மங்கை. கிளாலி, பூநகரி என்று பல சண்டைக் களங்களில் நின்றாலும் பெரியதொரு தாக்குதல் செய்யவேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவர் மனதை விட்டு அகலவில்லை.

19.09.94 அன்றிரவு மன்னார் கற்பிட்டிக் படற்பரப்புக்கு வந்தது எதிரிக் கப்பலான 'சாகரவர்த்தனா'. அதற்குச் சாவுமணி அடிக்கப் புறப்பட்டனர் புலிகள். நளாயினி தலைமையில் மங்கையின் படகு சீறிச் சென்றது. குறி தப்பவில்லை. தீப்பிழம்பிடை சாகரவர்த்தனா கடலில் மூழ்கியது தந்த சந்தோசத்தை விடவும் காற்றிடை கரைந்துபோன மங்கையும் நளாயினியும் இனி இல்லை என்ற நினைப்பு எல்லோர் மனதிலும் பெரும் பாரமாக ஏறிக்கொண்டது. இந்த வேங்கைகள் காற்றிலும் கடலிலும் மட்டுமல்லாது எங்கள் நினைவிலும் நீக்கமற நிறைந்துள்ளனர்.

- ஆண்டாள்

# இது கண்ணகிகள் காலம்!!

காலச் சக்கரம் சுழலும்!
காட்சிகள் மாறும்!
சிந்தை முழுவதும்
தாய்நிலம் சுமந்து
தம்மைக் கொடுத்தோர்
சரித்திரம் சாகுமோ?

கண்ணகியை நாம்
கண்ணெதிரே பார்த்ததில்லை...
எமக்குத் தெரிந்ததெல்லாம்
தேசத்திற்காய் தமைக்கொடுத்தோர்!!
அவர் ஈகம்!! – அது
என்றென்றும் வாழும்!!

கனன்ற தீயை கும்பியில் சுமந்து
குற்றுயிராக குடல் வெந்து போனாளே
அம்மா பூபதி..!!
அப்போது அவள்



கண்ணகியாக
கண்ணுக்குத் தெரிந்தாள்!!
அன்று அவளிட்ட
பெரு நெருப்புத்தான் – இன்று
கொழும்பு வீதிகளில்
கொழுந்து விட்டு எரிகிறதோ..?

காலங் கடந்து
புத்தியில் உறைக்கிறது
புத்தரின் குழந்தைகளுக்கு..
அன்றே சொன்னார் – எங்கள்
அண்ணன் பிரபாகரன்!

சிந்தையிற் தெளிவும்
தீர்க்க தரிசனமும்
கொண்ட கொள்கையில்
பிறளாத பண்பும்
ஒருங்கே கொண்ட
உன்னத மனிதன்!!
ஊனிலும் உணர்விலும்
விடுதலை வேள்வியை
விதைத்து வாழ்பவர்
கூற்றில் ஏதும்
குறைகள் இருக்குமோ??

பட்டினிச் சாவுகள்
உங்களைச் சூழும்!
பல்லக்கேறுவோர் – ஒருநாள்
பாதையில் நடக்கவே
நடுங்குவர் கலங்குவர்!!
நீங்கள்
முன்னையிட்ட தீ..
பின்னாளில் உங்களைக்

காவு கொள்ளும்!..
சத்திய வார்த்தைகள் – இப்போ
சிங்கள சரித்திரத்தை
புரட்டிப் போடுது.

கஞ்சிக்காக கையேந்தி நின்ற
காலத்தைத் தந்தவர்!!
இரக்கமேயில்லாமல்
குஞ்சுகள்... குழந்தைகள்...
முதியோர் என்று
எதையும் பார்க்காமல்
பாடையில் ஏற்றி
பரிதவிக்க விட்டவர்..
இறுதி யுத்தம் – என
இறுமாப்படைந்தவர் – இன்று
பதுங்கவும் குழிகளின்றி
பரிதவித்துக் கிடக்கிறாராம்!!
நாளிதழ்கள் எல்லாம்
நாளாந்தம் புலம்புது!!
பட்டினியும் பணவீக்கமும்
சுற்றி வளைக்குது!

முற்றுகைக்குள் தமிழனை
முடக்கி விட்டோம்...
எக்காளம் பேசியோர்
நாட்டை விட்டு ஓடவா – இல்லை
பாதுகாப்பிடம் தேடவா என்று
சித்தம் கலங்கி பித்துப் பிடித்திருக்க...

பிரபாகரன் காலம்
பொற்காலம் என்ற
ஒப்புதல் வாக்குமூலம்
சிங்கள மக்களிடமிருந்து!!
காலம் கடந்து
புத்தனின் குழந்தைகள்
புத்தியில் உறைக்குது!!

அடித்துச் சொல்வோம்
எங்கள் காலம் – அது
பொற்காலம்!!
நாட்டுக்கு நாடு
கையேந்தவில்லை..
கடனுமில்லை.. வட்டி கட்டவுமில்லை...
பொருளாதார தடைகள் நடுவில்
முப்பது வருடங்கள்... – நீண்ட
முப்பது வருடங்கள்.
கொலையுண்டு போனோம்!!!
குண்டடி பட்டோம்..!!!
பட்டினி கிடந்து
மாண்டவர் உண்டோ?

துண்டு நிலமும்
கடைசி துளி தண்ணீரும்
பஞ்சி பார்க்காத
உடல் உழைப்பும்
பஞ்சத்தில் இருந்து
எங்களைக் காக்கும்!!
தமிழர்க்கென்று
தனிக்குணம் உண்டு.
எந்தப் பெருநெருப்பும்
எம்மைத் தீண்டாது – இது
கண்ணகிகள் காலம்!!!



# பெண்ணியம்

ஒவ்வொரு தடவையும் ஒரு பெண் தனக்காக நிமிர்ந்து நின்று குரல் கொடுக்கும்போது அவள் தன்னை அறியாமல், உரிமை கோராமல் அனைத்துப் பெண்களுக்குமான குரலாக ஒலிக்கிறாள்.

- மாயா அஞ்செலோ.

என்னுடைய அம்மா என்னை ஒரு பெண்ணாக இருக்குமாறு எப்போதும் வலியுறுத்துவார். அவரைப் பொறுத்தவரை, 'நீ நீயாக இருக்க வேண்டும், சுதந்திரமாக இருக்க வேண்டும்' என்பதுதான் அதன் பொருள்.

- றுத் படர் கிங்ஸ்பேர்க்.



உலகில் எந்தப் பெண்ணாவது அடிமைத் தளைக்குள் சிக்குண்டு கிடக்கும்போது - அவளைப் பிணைத்திருக்கும் தளைகள் என்னிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருந்தாலும் கூட - நான் சுதந்திரம் இழந்து இருப்பதாகவே உணர்கிறேன்.

- ஓட்ரீ லோட்

நீங்கள் தொடர்ந்தும் அழுத்தம் என்னும் முற்றுகைக்குள் இருக்கும்போது போராளியாக மாறுவது தவிர்க்க முடியாததாகின்றது.

- கசாண்ரா டஃபி

பெண்களுக்கான பொறுப்பு என்பது சுய சிந்தனை, தனக்காக தானே பேசுவது, உங்களுக்காக பேசும் உரிமையை மற்றவர்கள் எடுத்துக் கொள்ளும் போது அதை அனுமதிக்க மறுப்பது, உங்கள் சொந்த மூளையும் உள்ளுணர்வும் சொல்வதை மதிக்கவும் பயன்படுத்தவும் கற்றுக் கொள்வது. இதனால்தான் நான் கடின உழைப்புடன் போராடுகிறேன்.

- அட்ரீன் றிச்.

# சிந்தனைகள்

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்”

‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.’

- பாரதியார்

“கற்பு நிலையென்று பேச வந்தால் இரு கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்.

வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.

- பாரதியார்.

பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்

பேதமை அற்றிடுங்காணீர்

- பாரதியார்.

பெண்விடுதலை இல்லையேல் மண்விடுதலை இல்லை.

- தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்.

“பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும் ஆண்களின் மனவுலகில் பெண்மை பற்றிய அவர்களின் கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமாகப்போவதில்லை.”

- தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்.

‘மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதம் ஏந்தி நிற்கின்றார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புக்களைச் செய்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்து நிற்கிறது’

- தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்.



‘பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே!’

- பாரதிதாசன்.

‘அடிமைத்தத்துவம் ஒழிய வேண்டுமானால், பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும்’

- பெரியார்.

நாம் தமிழீழப் பெண் சமூகத்தின் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கின்றது.

- தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்.

பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை.

-- தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்.

மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கின்றது. அது மனிதப் பிறவிகளுக்கும் பொதுவானது.

- தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்.

பெண் விடுதலை என்பது அரச அடக்குமுறைகளிலிருந்தும் சமூக ஒடுக்கமுறைகளிலிருந்தும் பொருளாதாரச் சுரண்டல் முறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதாகும்.

-- தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்.

# மனதைத் தொட்டுச் செல்லும் கவிதைகளில் பெண்ணியம்



ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்.

**- பாரதியார்**

வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்
வாங்கவே வந்திடுவார்கள்
நல்ல விலை பேசுவர் - உன்னை
நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்

**- பாரதிதாசன்**

என் பயணம் ஆரம்பித்தாயிற்று
முடிவுகளற்ற இலக்கை நோக்கி
தனித்தாயினும் பயணிப்பேன்
இயன்றவரை
என் சிறகுகளின் மீது நீளும்
எல்லாக் கைகளுக்கெதிராகவும்.
என் கனவுகளின் மீது
கொடூரங்களை வரைய நீளும்
எல்லாத் தூரிகைகளுக்கும் எதிராகவும்

எனையழுத்தும் இவ்
இறுகிய பார்வைகளினூடிருந்து
வீறு கொண்டதொரு
புல்லாய் நிமிர்வேன்
கூவத்தான் முடியாதாகினும்
ஈனஸ்வரத்திலேனும்
என் பாடல்களை முனகியபடி
யார் முன்பும் பணிதலின்றி
என் உணர்வுகளோடும் அவாக்களோடும்
வாழ்வேன்..
வாழ்வேன்.
வாழ்வேன் நான்!

**- பெண்ணியா**

எனக்காய் இரங்குமாறும்
கண்ணீர் விடுக்குமாறும்
யாரையும் கேட்கப் போவதில்லை
பாவப்பட்ட உயிரென்றெனக்கு
பிச்சையளிக்க முன்வராதீர்
வீண் கழிவிரக்கத்தில் என்னை
புரிந்து கொள்ள முயலாதீர்
எனது சுயத்தை அறிக.



வற்றாத வளத்துடன்
எனக்கென்றோர் வாழ்வு இவ்
வையகத்தில் இருந்தது
யாரையும் பற்றியிருக்காச்
சீவியச் செழிப்பில் வாழ்ந்த
தடயங்கள் இப்போதும் உண்டு.
மானம் பெரிதென மதித்த
மாண்பு எனது மரபு
உமைப்போல தலை நிமிர்த்தி
மீண்டும் இங்கு
வாழ்வதற்காய் எழுகின்றேன்.

- அம்புலி



ஒரு காட்டாறு
ஒரு பேரருவி
ஓர் ஆழ்கடல்
ஓர் அடை மழை

நீர் நான்
கரும்பாறை மலை
பசும் வயல் வெளி
ஒரு விதை
ஒரு காடு
நிலம் நான்

நானே ஆகாயம்
நானே அண்டம்
எனக்கென்ன எல்லைகள்
நான் இயற்கை
நான் பெண்

- அனார்

அம்மாவின் பானை இது
அவள். சுமந்ததை
நானும் சுமக்கிறேன்
என் மகள் வருகிறாள்
எப்போது விடுதலை?

- இரா மீனாட்சி

பாவ விமோசனத்துக்கு
ராமனுக்காகக் காத்திருக்காதே..
அவன்
சீதையின்
அக்கினிப் பிரவேச ஆயத்தங்களில்
ஆழ்ந்திருக்கிறான்.

- கவிஞர் கனிமொழி

ஒரு நாளேனும்
வாழ வேண்டும்
நான் நானாக..
என்றேனும் ஒருநாள்
நான் காணாமல் போய்விட்டால்
அடுப்படியின் பரணிலோ
சிலிண்டரின் மறைவிலோ தான்
முதலில் தேடுவார்கள் போலும்.

- மு சத்யா

சமையலறையிலிருந்து
பார்த்துக்கொண்டு இருந்தேன்.
சுவரோடு பந்து விளையாடுகிறவனை.
பந்தை எறிய எறிய
திருப்பியடித்தது சுவர் உற்சாகமாக
ஒரேயொரு முறையாவது
பந்து வீச
சுவருக்கும் வாய்ப்புத் தந்திருந்தால்.
இப்படி
மூர்க்கமாக உடைந்திராது
நிலைக் கண்ணாடி.

- உமா மகேஸ்வரி

என் பெயரே மறந்து போனேன்
என் மணவிழாவில்
நான் தொலைந்து போனேன்
ஆனாலும் யாருமே என்னை
தேடவேயில்லை.
நீந்த தெரியாவிட்டால் என்ன?
வெள்ளம் சொல்லித் தரும்
வா!!

- தாமரை

பெண்ணடிமை தீரும் மட்டும்
பேசுந் திரு நாட்டில்
மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பே

- பாவேந்தர்

( தொகுத்தவர் - வஞ்சி )



# பெருமை கொள் பெண்ணே!!

பெண் என்றாலே பெருமைக்குரியவள்தான்.
இந்த உலகத்தின் படைப்பின் அடையாளம்!
உயிரின் உதயத்தை உருவாக்கும்
வரம் கொண்டவள்!
பெண்ணென்ற ஒரு சொல்லில்
இந்த பிரபஞ்சமே
இயங்கிக் கொண்டிருக்கிறது
என்பதுதான் நிஜம்!

பெண் என்பவள் அற்புதம் நிறைந்தவள்!
மென்மை கொண்ட அவள் மனசு
வலிகளையும் சுமைகளையும்
எதையும் சுமக்கும் பூமியாகத்தான்
சுழன்று கொண்டிருப்பவள்!
வலிகளுடன் வலிமையோடு
போராடும் திறன் படைத்தவள்..!!



இந்த வாழ்க்கையுடன்
பின்னிப் பிணைந்திருப்பவள்!
இந்த பூவுலகில்
பெண்ணின்றி
எதுவும் அழகாக இருந்திட முடியாது!
அவளின் அரவணைப்பால்தான்
எந்த சாதனையும் படைத்திட முடியும்..!!

எதையும் எதிர் கொள்ளக் கூடியவள்!
எதையும் தாங்கும் உள்ளம் கொண்டதால்தான்
இந்த உலகத்தை,
தான் வாழும் சமூகத்தை வென்று,
பல தியாகங்களை செய்து,
வக்கிரம் மனம் படைத்த
மனிதர்களிடமிருந்து போராடி,
முன்னேறிக் கொண்டு வாழ்பவள்!!

இந்த அழகான படைப்பில்
பெண்ணென்பவள் சிறந்த உன்னத வடிவம்!!
எத் துணையின்றியும் நிமிர்ந்து கொள்பவள்!
அன்புக்காக அடிமையாவாள்!
அதிகாரத்திற்கு அடங்க மறுப்பாள்!
நாணமும் இருக்கும்,
நியாயமும் இருக்கும்,
நளினமும் இருக்கும்,
திமிரும் இருக்கும்.
அவள் ஒரு அற்புதமான பிறப்பு.!!

பெருமை கொள்ளுங்கள் உலகமே!!
அவளின்றி எதுவும் இல்லை
இங்கு என்பதை உணருங்கள்!

பெண்ணே!!
பெண்ணாகப் பிறந்ததில் நீ
பெருமை கொள்!

சந்திரிகா
(கண்மணி)
08-03-2022




ஆடிப்பெருக்கு என்றொரு பழைய தமிழ்த் திரைப் படம். அதிலே, பள்ளி மாணவ மாணவியர் சிலர். பெண்கள் உயர்ந்தவர்களா, ஆண்கள் உயர்ந்தவர்களா என்று தமக்கிடையில் தர்க்கிப்பது போன்ற ஒரு பாடல் காட்சி வரும்.

இரண்டு தரப்பினரும் பல்வேறு புராண, இதிகாச உதாரணங்கள் மூலம் தத்தமது தரப்பை நியாயப் படுத்துவது போல பாடல் நகர்ந்து செல்லும். கடைசியில் கதாநாயகன்,

“யேசு, காந்தி மகான், புத்தரைப் போல இதுவரை பெண்கள் இருந்ததுண்டா?” என்று பாடிவிட்டு, கைகள் கட்டி இறுமாப்புடன் பெண்கள் பக்கம் பார்த்தபடி நிற்பார். ‘எந்தப் பதிலும் இனிப் பெண்கள் சொல்ல இயலாது என்பது போல’.

கதாநாயகி,

“யேசு, காந்தி மகான் புத்தரையும் ஈன்றது எங்கள் தாய்க்குலமே!!” என்று அனைத்துக்கும் முத்தாய்ப்பு வைப்பது போல சொல்வதாய் பாடல் நிறைவடையும்.

“பெருமைகள் எல்லாம் பெண்ணாலே. இதை அறியணும் உலகம் முன்னாலே” என்று, அன்றும், இன்றும், இனி என்றும் இதுவே யார்த்தம் என்பதை வலியுறுத்திச் சொல்வோம்.

சம காலத்தில், பெண்கள் சார்ந்த பல பரிணாமங்களில் இந்த உண்மையை நாம் கண்கூடாகக் காண முடியும். இன்று உலகம் முழுவதிலும், குறிப்பாகப் புலம் பெயர் நாடுகளில் ஏறத்தாள எல்லாப் பெண்களுமே உழைத்துப் பொருள் தேட வேண்டிய தேவை இருக்கிறது. இதனால், வீட்டில் வைத்துப் பராமரிக்க வேண்டிய வயசுக் குழந்தை

களுக்கான பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் எல்லா இடங்களிலும் உருவாகியுள்ளன. தாய்மார் வேலைக்குப் போகும் நேரங்களில் அவர்களுடைய குழந்தைகள் அங்கே பராமரிக்கப்படுகின்றனர். ஆச்சரியம் என்னவென்றால், இப்படிப்பட்ட பராமரி-ப்பு நிலையங்களில் பணிபுரிபவர்கள் எல்லோருமே பெண்களாக இருப்பதுதான். ஒரு ஆண் பணியாள ரைக் காண்பது அபூர்வம். இதன் காரணம் தான் என்ன?

விடை மிகவும் சுலபமானது. தாய்மை உணர்ச்சி யோடு ஒரு குழந்தையைப் பொறுப்புடன் பராமரிக் கக்கூடிய ஆற்றல் அல்லது தகைமை பெண்க-ளுக்கு மட்டுமே உரிய பண்பு என்பதுடன் எந்த ஒரு ஆணிடத்திலும் அது காணப்படுவதில்லை என்பது தான் அது. இதைவிட, பராமரிப்பு நிலையங்களில் பிள்ளைகளைக் கொண்டுவந்து விடுவது, பின்-னர் வந்து அவர்களைக் கூட்டிச் செல்வது போன்ற வேலைகளையும் பெருமளவில் பெண்கள் தான் செய்கிறார்கள் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

இவற்றுடன், குடும்பத்தினருக்கான அன்றாட உணவைத் தயாரிப்பதும் பெரும்பாலும் பெண்க-ளின் பங்காகவே இருக்கிறது. மொத்தத்தில், பெண் என்ற அச்சாணியைக் கொண்டே ஒரு குடும்பத் தேர் நகர்கின்றது என்ற வாழ்வியல் உண்மையை யாரும் மறுக்க முடியாது!!

'ஒற்றைத் தாய்' – Single Mother. இந்த சொற் பதம் இன்றைய காலகட்டத்தில் இயல்பான ஒன்றாகி விட்டது. விதவையாக்கப்பட்டு, விவா-கரத்து செய்யப்பட்டு, கணவனால் கைவிடப்பட்டு, என, இது போன்ற வெவ்வேறு காரணிகளால் குடும்ப பாரத்தைத் தனியாளாக நின்று சுமக்கும் நிர்ப்-பந்தம் பெண்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. குறிப்பாக, எமது தாய் நிலத்தில், கொடிய போரின் விளைவாக ஆயிரமாயிரம் பெண்கள் இன்று 'ஒற்றைத் தாய்' நிலைக்கு ஆளாகி, வலியும் வேதனையும் மிகுந்த ஒரு வாழ்க்கைச் சூழலில் குடும்ப பாரம் சுமந்து, தம் பிள்ளைகளை வளர்த்தெடுக்கப் படாத பாடு படுகி-ன்ற கதைகள் பலவற்றை நாமறிகிறோம்.

இதைப் போன்று, 'ஒற்றைத் தந்தை' – Single Father என்ற வார்த்தையை மிகமிக அரிதாகவே கேட்க முடிகிறது. என்ன காரணம்? கஷ்டமோ நஷ்டமோ – எத்தனை பிள்ளைகள் என்றாலும் தனி ஆளாக குடும்ப பாரத்தைச் சுமக்கும் தன்னலமற்ற அர்ப்பணிப்பு ஒரு பெண்ணிடம் மட்டுமே காணப்படும். இதே போன்ற ஒரு சூழலை எதிர்கொள்ள ஆண்கள் தயக்கம் காட்டுவார்கள் என்பதே உண்மை. 'எதை யும் எதிர்கொள்வேன்' என்ற தளராத தன்னம்பிக் கையின் குறியீடாக இங்கே பெண் மிளிர்கிறாள்.

அனைத்துக்கும் உச்சமாக, இன்று பரவலாகப் பெண்கள் மீது நிகழ்த்தப்படுகின்ற பாலியல் வன் கொடுமை!! எத்தனை சம்பவங்கள் கேள்விப்படுகி ன்றோம்?

அண்மையில் கூட, லண்டனில், ஒரு தமிழ் ஆசி ரியை ஒரு பூங்காவில் வைத்து வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு உயிர் விட்ட சேதியை அறிந் தோம். இப்படி ஒரு சம்பவம் நடக்கும்போது, பாதி க்கப்பட்ட பெண்ணுடைய பெயர் மட்டும்தான் பேசு பொருளாகி விடுகின்றது. அதற்குக் காரணமாயி ருந்தவன் அல்லது இருந்தவர்கள் யாரென்பதோ அவர்தம் செயல்களோ ஏன் வெளியே தெரிவது மில்லை? வருவதுமில்லை?

எங்கெல்லாம் பெண்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் இவை போன்ற வேதனைகளும் வலிகளும் இருந்து கொண்டே இருக்கும் என்-பதையும், இவற்றையெல்லாம் தாண்டித்தான் ஒவ் வொரு பெண்ணும் சாதனை படைக்கிறாள் என்ற பேருண்மையையும் இந்த உலகம் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது அவசியமானதொன்று.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 இனை அனைத்-துலக பெண்கள் நாளாக பிரகடனம் செய்து, பெண்களின் பெருமை பேசி, சாதனைப் பெண்க-ளின் பெயர்களைப் பட்டியலிட்டுக் கொண்டாடும் இந்த சமுகம், உலகத்தின் மூலை முடுக்கெங்கும் ஈடிணையில்லா அர்ப்பணிப்புடன் வாழ்க்கை யைச் சவாலாக ஏற்று வாழ்ந்து கொண்டிருக்கும் எத்-தனையோ முகம் தெரியாத லட்சோப லட்சம் பெண்களும் கூட இவ்வாறு போற்றுதலுக்குரிய-வர்கள் என்ற பேருண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

மார்ச் 8 மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் பெண்க-ளுக்கான நாள் என்பதுதான் இன்றைய வாழ்வின் யதார்த்தம்.

"எல்லா நாளும் பெண்கள் நாளே!"

இவ்வருட மகளிர் நாளுக்கான வாசகமாக இதை முன்மொழிவோமா? வாருங்கள்.!! அனைவரும் கூடி உரத்துச் சொல்வோம்.

"எல்லா நாளும் பெண்கள் நாளே!!!"

- சித்ரா



# சாதனைப் பெண்

## ரூபினி



கண்களைக் கூசச்செய்யும் ஆவணி மாத வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. தூரத்தில் வெட்ட வெளியில், வெறுந்தரையில் மரக்கட்டை போல அசைவற்று மல்லாந்து கிடந்த அந்த உருவத்தை, யாழ் கோட்டையிலிருந்தபடியே, பார்த்த சிங்கள இராணுவ சிப்பாய் தனக்குள் நினைத்துச் சிரித்துக் கொள்கிறான்.

"அவளைச் சுட்டுத் தீர்த்து விட்டோம்!!"

"அண்ணை! சூடேறிக் கொண்டிருக்கிற இந்த நிலமும், என்ரை உடம்பிலை பட்டு எரிச்சுக் கொண்டிருக்கிற இந்த வெயிலும் என்னை ஒண்டும் செய்ய முடியாது. இது நீங்கள் கற்றுத் தந்த நெஞ்சுரம்! எனக்கு மட்டுமில்லை... எங்கட மகளிர் அணி முழுவதுக்குமே நீங்கள் சொல்லித் தந்த பாடம்."

".....ஆடாமல், அசையாமல் அப்பிடியே கிட.....!! உனக்கு உயிர் இருக்குதென்று அவனுக்கு தெரிஞ்சா சும்மா விடமாட்டான்... சுட்டுக் கொண்டேயிருப்பான். நீ செத்துப் போனதாகவே அவன் நினைக்க வேணும்....நாங்கள் எப்பிடியும் வந்து உன்னைக் காப்பாத்துவம்".... 'தூரத்திலை இருந்து கேட்ட இந்த அண்ணாக்களின்ரை குரல் கூட உங்கட குரலாகத்தான் எனக்கு கேட்டதண்ணை!.'

எந்த வித அசைவும் இல்லாமல் உயிரற்ற உடல் போல கிடந்த ரூபிணியின் உள்ளத்தில் ஓடிய எண்ணங்கள் இப்படித்தான் இருந்திருக்கும்..

கட்டாந்தரை!! சூடேறிய நிலம். மேலே சுட்டெரிக்கும் வெயில். அங்கே மல்லாந்து கிடக்க வேண்டும்..... உடலில் இம்மியளவும் அசைவில்லாமல். அதுவும் மணிக்கணக்காக!

கற்பனை செய்து பாருங்கள். முடியுமா எங்களால்? குறைந்த பட்சம் ஓரிரு நிமிடங்கள் மட்டுமாவது? கற்பனையிலேயே, சூடு தாங்க முடியாமல் நமது உடம்பு நெளிகிறதே!

ஆனால்,.. கற்பனைக்கு எட்டாத இந்த அற்புதம் எம் தாய் நிலத்தில் அன்று நிகழ்ந்தது. ஒரு பகற் பொழுது முழுவதற்குமாய் இதை நிகழ்த்திக் காட்டினாள் ஒரு வீரப் பெண்.

மார்ச் 08 ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப்படுவதும், அதன் மூலகர்த்தாக்கள், மூல காரணங்கள் பற்றி மீண்டும் மீண்டும் பேசுவதும், எழுத்தில் பதிவிடுதலுமே தொடர் நடைமுறைகளாகி வருகின்றன.

இதனின்று சற்று வித்தியாசமாய் -

- அத்தி -

வரலாற்றில் ஈழப்பெண்களுக்கு ஒரு மகத்தான பெருமையையும், உலகளாவிய ஒரு தனித்துவத்தையும் ஏற்படுத்திக் கொடுத்த பெருந்தலைவர் மேதகு பிரபாகரனுடைய பேராற்றலையும், ஆளுமையையும் நிரூபிக்கும் வகையில் மகளிர் அணிப் போராளிகள் தரையிலும், கடலிலும் பல்வேறு பரிணாமங்களில் வியக்க வைக்கும் சாதனைகள் பல புரிந்து உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள்.

இந்த பதிவின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முன்னோட்டம் எதிரியுடனான சமரின் போது, மகளிர் அணியைச் சேர்ந்த ரூபிணி என்ற வீராங்கனை தனது அபார மனவலிமையினால் எப்படி உயிர் மீண்டு வந்தாள் என்பதை விபரிக்கும் ஒரு சாதனைக் கதையாக விரிகிறது. சர்வ தேச மகளிர் தினம் கொண்டாடப்படும் இந்த மார்ச் மாதத்தில் அந்த வீராங்கனையின் சாதனையைப் பகிர்ந்து கொள்ளுதல் பொருத்தமல்லவா?

தரையிலும் கடலிலும் எமது பெண்கள் நிகழ்த்திய அளவிறந்த போராட்ட சாதனை வரிசையில் இது சற்று வித்தியாசமானது. பலரும் இது வரை அறிந்து கொள்ளாத ஒரு சம்பவமாகக் கூட இது இருக்கலாம்.

யாழ் கோட்டையில் நிலை கொண்டிருந்த சிங்கள இராணுவம் மீதான இறுதித் தாக்குதலுக்குப் புலிப் போராளிகள் தயாராகிக் கொண்டிருந்த நேரம் அது. இவர்கள் நிலையெடுத்து நின்றிருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் கரும்புலி மேஜர் சஞ்சிகா தலைமையில் 75 கரும்புலி வீராங்கனைகள் தாக்குதலில் இணைந்து கொள்ளும் தயார் நிலையில், இரவும் பகலும் பதுங்கு குழிகளில் தங்கியிருந்தார்கள். மிக அரிதான பொழுதுகளில் மட்டும் ஏதாவது சமையல் செய்யும் வாய்ப்பு ஏற்படும். ராணுவத்தால் சுடப்பட்டு இறந்த மாடுகளின் இறைச்சியைச் சமைத்து சாப்பிடுவார்கள். இவை தவிர மூன்று வேளை உணவும் வெளியே இருந்து வேறு வேறு போராளிகள் கொண்டு வருவார்கள். வான் வழித் தாக்குதல்கள் நடைபெறும் நாள்களில் உணவு கொண்டு வருவது சாத்தியப்படாமல் போகும். பதுங்கு குழி போராளிகள் எல்லாரும் பட்டினி!

கோட்டையில் ராணுவம் நிலைகொண்டிருந்த இடத்துக்கும், போராளிகள் நிலை கொண்டிருந்த பகுதிக்குமிடையில் இருந்த தூரத்தின் பெரும்பகுதி வெளியாகவும், கோட்டையைச் சுற்றி அமைந்திருந்த அகழி ஒரு பகுதியாகவும் இருந்தது. ராணுவம் கோட்டையிலிருந்தபடி தாக்குதல் மேற்கொள்ள, புலிப் போராளிகள் தங்கள் காவலரண்களிலிருந்து எதிர்த்தாக்குதல் நடத்துவார்கள்.

சில சந்தர்ப்பங்களில், இரவோடிரவாக போராளிகள் அந்த வெளிப்பகுதி வரைக்கும் நகர்ந்து போய் நிலையெடுப்பதும் உண்டு. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில்தான், 1990 ஆகஸ்ட் மாதத்தின் ஒரு இரவு, ரூபிணி என்ற பெண் போராளிக்கு ராணுவத்தின் துப்பாக்கிச்சூடு பட்டுவிட, அவள் மயங்கிச் சாய்கிறாள். உடலில் எதுவித அசைவும் காணப்படாததில், அவள் வீரச்சாவு அடைந்து விட்டதாக ராணுவம் நினைத்தது.

இரவோடிரவாகப் போராளிகள் அந்த வெளிப் பகுதியிலிருந்து பின்வாங்கித் தங்கள் பகுதிக்குத் திரும்பினார்கள்.

மறுநாள் காலை. மயக்க நிலையில் கிடந்த ரூபிணிக்கு கொஞ்சம் கொஞ்சமாக நினைவு திரும்ப, உடலில் சிறிதாய் அசைவு தெரிகிறது. போராளிகள் இதை அவதானித்த அதே சமயம், ராணுவமும் கவனித்து விட்டது. பிறகென்ன? ரூபிணி கிடந்த இடத்தை நோக்கி துப்பாக்கிச் சுடுகள் பறக்கின்றன!

“அப்படியே ஆடாமல்? அசையாமல்...செத்துப் போனது போலைக் கிட. நாங்கள் எப்பிடியும் அங்கே வந்து உன்னைக் கூட்டி வாறம்...” என்று உரத்த குரலில் அவளுக்கு கேட்கும் படி, தங்கள் காவலரண்களில் நின்றபடியே போராளிகள் சத்தமிட்டுச் சொன்னார்கள்.

ஆவணி மாதத்தின் கொளுத்தும் வெயில்! சூரிய வெப்பத்தை உள்வாங்கிய நிலம் சூடாகிக் கொண்டே போக.. ரூபிணியின் தலை, முதுகுப் பகுதியிலிருந்து குதிக்கால் வரைக்கும் கொதிக்கும் நிலத்தின் சூடு பரவி இம்சை செய்கிறது. மேலே வானத்துச் சூரியன் உச்சி முதல் பாதம் வரை வெயிலை நெருப்பாய் அள்ளி வீசிக் கொண்டிருந்தான்.

எதற்கும் கிறுங்கவில்லை அவள்!!

கடும்தவம் இயற்றுகின்ற ஒரு தவமுனி போல அசைவற்றுக் கிடக்கிறாள்.

தேச விடுதலைக்கான தவம்.

தாயாகி நின்ற பெரும்தலைவன் வளர்த்து விட்ட ஈடிணையில்லா மனோ வலிமையின் உச்ச நிலை!

பகல் மயங்கி இருள் சூழத் தொடங்கிறது. சில போராளிகள் மெதுமெதுவாக நகர்ந்து அவ்விடம் போய் ரூபிணியை பத்திரமாகக் கூட்டி வருகிறார்கள்.


எரிக்கும் வெயிலில், ஆடாமல் அசையாமல் பகல் முழுவதும், கிடந்து வந்த களைப்பும், சோர்வும் இரண்டு, மூன்று நாள்களில் நீங்கி விட, மீண்டும் களமாடத் தயாராகிவிட்டாள் அந்த சாதனைப் பெண்.

■

# கேள்வி - பதில்

இல 2

## 3. பண்டா - செல்வா ஒப்பந்தம் என்றால் என்ன? எப்போது எதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது?



26.07.1957 அன்று, அப்போதைய பிரதமராகவிருந்த S.W.R.D பண்டாரநாயக்கவிற்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் S.J.V செல்வநாயகம் அவர்களுக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

- தனிச் சிங்களச் சட்டம்.
- இந்திய வம்சாவளி தமிழ்த் தோட்டத் தொழிலாளிகளின் குடியுரிமை பறிப்பு.
- தமிழர் தாயகப் பகுதியில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள்.

என்பனவற்றால் கொந்தளித்து, சாத்வீகப் போராட்டங்களில் இறங்கியிருந்த தமிழ் மக்களை சமாதானப்படுத்தும் நோக்கில் இந்த ஒப்பந்தம் நடந்தேறியது. பிரதேச சபைகளுக்கு தரப்படும் அதிகாரங்களுள், அந்தப் பிரதேசத்தினுள் குடியேற்றப்படுபவரை தெரிவு செய்யும் உரிமையும் அந்தப் பிரதேசத்தினுள் வேலைக்கு நியமிக்கப்படும் ஆட்களை தெரிவு செய்யும் பொறுப்பும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படும் என்ற உடன்பாட்டின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

04.10.1957 அன்று சிங்களத் தலைவர்களில் ஒருவரான J R ஜெயவர்த்தன, வேறு பல சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து 'கண்டி யாத்திரை' சென்று தமது எதிர்ப்பைக் காட்டியதாலும், பௌத்த பிக்குகளின் கடுமையான எதிர்ப்பினாலும் இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவே இல்லை.

## 4. டட்லி - செல்வா ஒப்பந்தம் என்றால் என்ன? இந்த ஒப்பந்தத்தின் பின்னணி என்ன?





24.03.1965 அன்று, அப்போதைய பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்கவும் தமிழர் தரப்பின் தலைவராகவிருந்த S.J.V செல்வநாயகமும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கில் நிர்வாக மொழியாகவும் ஆவணங்களைப் பதிவு செய்யும் மொழியாகவும் தமிழ் மொழியே இருக்கும்.

வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ் மொழி பயன்பாட்டில் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதேச ஆட்சி மன்றங்கள் உருவாக்கப்படும். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இரு தலைவர்களும் பிறிதொரு நாளில் மீண்டும் கூடி முடிவெடுப்பர்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ்.

வடக்கு கிழக்கில் உள்ள அரச நிலங்கள் முதலில் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அப்படி நிலமற்றவர்கள் என்று யாரும் இல்லாத பட்சத்தில் வடக்கு கிழக்கு மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அதன் பின்னர், நாட்டிலுள்ள மற்றைய குடிமக்களுக்கு ஒதுக்கப்படும். அதிலும் தமிழ் மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும்.

என்ற உடன்பாட்டினை எட்டிய பின்னரே இந்த ஒப்பந்தத்தில் இருவரும் கைச்சாத்திட்டனர்.

வழமைபோல, சிங்கள பேரினவாதத்தைக் கட்டிக் காக்கும் பௌத்த மகாசங்கத்தின் கடும் எதிர்ப்பு இந்த ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்தது.

இந்தத் தீர்மானத்தின் சாராம்சம்.

# "தன் குழந்தைகளுக்கு எழுதிய தோழர் சே குவாரவின் இறுதிக் கடிதம்...!"



அன்புள்ள
இல்டிடா, அலைடிடா, கமிலோ, மற்றும் எர்னெஸ்டோ
ஒரு நாள் இந்த கடிதத்தை நீங்கள் படிப்பீர்கள்.
உங்கள் அப்பா அன்று உயிரோடு இருக்கமாட்டேன்.
நீங்கள் இந்த அப்பாவை மறந்திருக்கலாம்
குழந்தை எர்னெஸ்டோ என்னை முற்றிலும்
மறந்திருக்கலாம்.
உங்கள் அப்பா மனசாட்சிக்கு நேர்மையாகவும்
கொள்கையில் உறுதியாகவும் இருந்தேன்.
ஒரு புரட்சியாளனின் பிள்ளைகள் நீங்கள்
அதை மட்டும் மறந்துவிடாதீர்கள்.
நல்ல புரட்சிக்காரர்களாக
நீங்கள் வளரவேண்டும்.
கல்வி மிகவும் அவசியம்.
நன்றாக படியுங்கள்.
கற்றதை மக்கள் முன்னேற்றத்திற்காக பயன்படுத்துங்கள்.
நீங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும்
புரட்சிக்கு ஒற்றுமைதான் முக்கியம்.
இந்த உலகத்தில் எந்த மூலையில்
அநீதியைக் கண்டாலும் தயங்காமல் அதை எதிர்த்து
போராடுங்கள்.
நினைவிருக்கட்டும்....
நீங்கள் சே குவாராவின் பிள்ளைகள்.
முத்தங்களுடன் உங்களைப் பிரிகிறேன்

உங்கள் அன்பு அப்பா
*சே குவாரா (1965)*

# உலகின் முதல் பெண்கள்



உலகின் முதல் பெண் பிரதமர் -

சிறிமாவோ பண்டாரநாயக்கா

- ஸ்ரீலங்கா - 1960

இஸ்ஸாமிய நாடொன்றில் முதன் முதலாக

தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதமர்

பெனாசீர் பூட்டோ

- பாகிஸ்தான் - 1988






உலகின் முதல் பெண் அதிபர்

இஸபெல் பெரோன்

- ஆர்ஜெண்டினா - 1974

ஐ.நாடுகள் சபையின் முதல் பெண் தலைவி

திருமதி விஜயலட்சுமி பண்டிற்

- 1953





ஐரோப்பாவின் முதல் பெண் மருத்துவர்

மரியா மாண்டி ஸாரி

- இத்தாலி

எவரெஸ்ட் சிகரத்தை தொட்ட முதல் பெண்மணி

ஜுங்கோ தாபேய்

- யப்பான் - 1975






விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்மணி

வலன்டினா சவீத்ஸ்காயா-

Valentina Tereshkova

- சோவியத் யூனியன் - 1963

ஆங்கில கால்வாயை

முதலில் நீந்தி கடந்த பெண்

கெர்ட்ருட் எடர்லே கரோலின்





முதல் பெண் விமானி -

ரேமண்டி டி லரோச்

Raymonde de Laroche

பிரான்ஸ்

8 March in 1910

# புலிகள் ஏன் அடிக்காமல் பின் வாங்கினார்கள்?

வெற்றிட அல்லது தேர்மோபாரிக் குண்டுகள் (Vacuum or Thermobaric Bombs) எனப்படுபவை காற்றிலிருந்து ஒட்சிசனை இழுத்தெடுத்து அதிக வெப்பநிலையுடன் வெடிக்கக் கூடிய ஒரு வகை வெடிகுண்டாகும். வழமையான வெடி பொருட்களை விடவும் பல மடங்கு சக்தி வாய்ந்த இந்த வெடிபொருள் வெடிக்கும்போது அதன் அழுத்தமும் வெப்பமும் அதிக நேரத்திற்கு அந்த இடத்தில் நீடிப்பதன் மூலம் பல மடங்கு உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்த வல்லது. மற்றைய குண்டுகள் 25% ஒட்சிசனை காற்றிலிருந்து எடுத்துக் கொண்டால் இந்த வெற்றிடக் குண்டுகள் 100% ஒட்சிசனை எடுத்து வெடிக்கும். முக்கியமாக சுரங்கப் பாதைகள், பதுங்கு குழிகள் போன்றவற்றைத் தாக்க பயன்படுத்தும் போது அதில் இருப்பவர்கள் ஒட்சிசன் இல்லாமல் இறந்துவிடும் அபாயம் பாரியளவில் இருப்பதால் இவ் வகைக் குண்டுகள் உலகில் தடைசெய்யப் பட்ட குண்டுகளாக இனங்காணப் பட்டுள்ளன.

இவ்வகையான குண்டுகளை ரஷ்ய இராணுவத்தினர் தமது மக்களுக்கெதிராக பயன்படுத்தியதாக உக்ரைன் தூதர் ஒக்ஸானா மார்கரோவா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து, அமெரிக்காவும் ஏனைய நேட்டோ சார்பான மேற்கு நாடுகளும் கண்டனங்களைத் தெரிவித்த வண்ணம் உள்ளன.





ஆனால் சிறீலங்கா இன அழிப்பு அரசு அதை கொள்முதல் செய்யும் போதும் அதைத் தமிழர்கள் தலை மீது கொட்டும்போதும் வாய் மூடி மௌனித்திருந்தவர்கள்தான் இவர்கள்.

சூழலிலுள்ள ஒட்சிசனை உறிஞ்சி வெடிக்கும் இந்த வகை குண்டுகள் வெளிப்புறத்தில் காயம் ஏற்படுத்தாமல் உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடியவை. அத்தோடு பெரும் நாசத்தையும் ஏற்படுத்த வல்லவை.

இறுதி யுத்தத்தில் மன்னார் களமுனையிலிருந்து நந்திக்கடல் வரை இது பயன்படுத்தப்பட்டது. நான்காம் கட்ட ஈழப் போரில் ஒவ்வொரு நகர்வின் போதும் இந்த வகைக் குண்டுகளைப் போட்ட பின்பே சிங்களப் படைகள் நகர்ந்தன. இதனால் தான் புலிகள் ஒவ்வொரு கள முனையிலிருந்தும் பின்னகர நேரிட்டது.

"புலிகள் ஏன் அடிக்காமல் பின் வாங்குகிறார்கள்?" என்று வன்னியில் மக்கள் அங்கலாய்த்ததன் மர்மம் இதுதான். அதியுச்ச அளவில் இந்த வெற்றிடக் குண்டுகளை ஆனந்தபுரத்திலும் பின்பு புலிகளின் இறுதிக்கட்ட உச்ச சமரான தேவிபுரம் - சாலை ஊடறுப்பின் போதும் சிங்களம் பாவித்தது.

(இந்தக் களமுனைகளில் எந்தக் காயமும் இல்லாமல் மடிந்த போராளிகளின் வித்துடல்களை நீங்கள் அவதானித்திருக்கலாம்).




புலிகளை வீழ்த்த சிங்களத்திற்கு இந்தத் தடை செய்யப்பட்ட இந்த வெற்றிடக் குண்டுகளைப் பாவிக்கும் முழு ஆலோசனைகளும் வழங்கியது அமெரிக்காதான். இப்போது தமக்கு சார்பாக உக்ரைன் தேவை என்பதற்காக ஒப்பாரி வைக்கிறார்கள். அப்போது இல்லாத மனித நேயம் இப்போது எங்கிருந்து வந்தது?

புவிசார் அரசியல் என்ற பெயரில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட, தொடர்ந்தும் இழைக்கப்படும் அநீதிகளுக்கான விசாரணையில் 13 ஆண்டுகளாகியும் நீதி கிடைக்காத நிலையில், சண்டை தொடங்கி ஆறு நாட்களேயான நிலையில் ரஷ்யாவை போர்க்குற்றவாளியாக்கி விசாரிக்க ஒன்றாகச் சேர்ந்து நடவடிக்கை எடுக்கிறார்கள்.

நாங்கள் எங்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் களைந்து ஓரணியாக பலமாக வேண்டும். எம்மைத் தற்காத்துக் கொள்ள உள்ள ஒரே வழி இதுதான்.

## துருக்கி அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்ட குர்திஸ் மொழி எழுத்தாளர்






ஒரு குட்டி கதை

# தினை விதைத்தவன் தினை அறுப்பான்

ஸ்காட்லாந்து நாட்டில் ஃப்ளெமிங் என்ற பெயரில் ஒரு ஏழை விவசாயி இருந்தார். ஒருநாள் வயலில் வேலை செய்யப் போனபோது உதவி செய்யக் கோரி ஒரு குரல் அருகிலிருந்த சதுப்பு நிலத்தில் இருந்து கேட்டது.

தன் கையிலிருந்தவற்றை அப்படியே போட்டு விட்டு ஓடினார் ஃப்ளெமிங். ஒரு சிறுவன் இடுப்பளவு ஆழத்தில் அந்தப் புதை மணலில் சிக்கிக் கொண்டு, வெளியே வர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

நல்லவேளையாக ஃப்ளேமிங் அவனை காப்பாற்றினார். இல்லையென்றால், அந்தச் சிறுவன் கொஞ்சம் கொஞ்சமாக புதை மணலில் மூழ்கி இறந்திருப்பான்.

அடுத்த நாள் ஒரு ஆடம்பரமான வண்டி ஃப்ளெமிங் வீட்டு முன்னால் வந்து நின்றது. நேர்த்தியாக உடை அணிந்த ஒரு பிரபு அவ் வண்டியிலிருந்து இறங்கி வந்து, நேற்று ஃப்ளெமிங் காப்பாற்றிய சிறுவனின் தந்தை தாம் என்று அறிமுகம் செய்து கொண்டார்.

"நீங்கள் என் மகனின் உயிரைக் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு நான் ஏதாவது கொடுக்க விரும்புகிறேன்", என்றார்.

"இல்லை, என்னால் எதுவும் வாங்கிக் கொள்ள முடியாது" என்று பணிவாக மறுத்தார் ஃப்ளெமிங்.


அப்போது அவரது பிள்ளை அவர்களது எளிய குடிசையின் வாசலுக்கு வந்தான்.

"அவன் உங்கள் மகனா?" என்று கேட்டார் பிரபு.

"ஆமாம்" என்று பெருமையுடன் கூறினார் ஃப்ளெமிங்.

"அப்படியானால் சரி, நாமிருவரும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுவோம். என் பிள்ளைக்குக் கிடைக்கும் அதே மிகச்சிறந்த கல்வியை அவனுக்குக் கொடுக்கிறேன். அவன் அவனது தந்தையைப் போலிருந்தால் பிற்காலத்தில் நாமிருவரும் பெருமை அடையக்கூடிய அளவுக்கு வருவான்" என்றார்.

இப்படியாக அவர்களுக்குள் நட்பு மலர்ந்தது. சொன்னதோடு மட்டுமல்ல் செய்தும் காண்பித்தார். விவசாயியின் மகன் மிகச் சிறந்த பள்ளிக் கூடங்களில் படித்தான். லண்டனில் உள்ள புனித மேரி மருத்துவப் பள்ளியில் படித்து, உலகம் புகழும் பெனிசிலினைக் கண்டுபிடித்த 'சர் அலெக்ஸ்சாண்டர் ஃப்ளெமிங்' ஆனார்.



வருடங்கள் பல கழிந்தபின் பிரபுவின் பிள்ளை நிமோனியாவால் பாதிக்கப்பட்டபோது பெனிசிலின் தான் அவரைக் காப்பாற்றியது.

அந்த பிரபுவின் பெயர் லார்ட் ரண்டோல்ப் சர்ச்சில். அவரது பிள்ளை?

அவர்தான் 'சர் வின்ஸ்டன் சர்ச்சில்'

**தினை விதைத்தவன் தினை அறுப்பான்.**


தமிழர் பரம்பரை
பரன்
பரை
சேயோன்
சேயோள்
ஓட்டன்
ஓட்டி
பூட்டன்
பூட்டி
பாட்டன்
பாட்டி
தந்தை
தாய்
நாம்
மகன்
மகள்
பெயரன்
பெயர்த்தி
கொள்ளுப் பெயரன்
கொள்ளுப் பெயர்த்தி
எள்ளுப் பெயரன்
எள்ளுப் பெயர்த்தி

ஒரு புனித உலகம்
உதயமாகட்டும்.
பெண்மையை போற்றி
தாய்மையை மதிக்கும்
பொற்காலம் உதயமாகட்டும்.
அதுவரை சலங்கை கட்டிய
என் கால்கள் ஓயப் போவதில்லை!

